[illegible] பத்து

Registered as a Newspaper

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்.

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 05 திங்கட்கிழமை (21-10-1996) UTHAYAN A Liveyi National Tamil Daily கதிர் 247

# இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் ஐ.நா. சபையை பங்கேற்க அழுத்தம்

## ஆனால் இந்தியா ஆட்சேபம்

கொழும்பு, ஒக்ரோபர் 21

இலங்கையில் நடைபெறும் போரை நிறுத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை பங்கு வகிக்க அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கைக்கு உதவும் நாடுகள் பலவும் சந்திரிகா அரசாங்கத்தின் மீது தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய வருகிறது.

சம்பந்தப்பட்ட நாடுகள் பலவும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டை இராணுவம் கைப்பற்றி இங்கு மக்கள் மீளக்குடியேறாத காலத்தில் இருந்து ஐ நா. இது விடயத்தில் பங்கேற்கவேண்டும் என்ற கருத்து இந்நாடுகளிடம் நிலவி வருகிறது.

இப்போது இந்தக் கருத்து இலங்கை அரசின் மீதான அழுத்தமாக மாறியிருப்பதாக அறியப்படுகிறது.

இவ்விவகாரத்தில் ஐ நா. கைபோடாமல் தவிர்க்கும் பொருட்டு இலங்கை அரசு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சரம்

### விமானக்குண்டு வீச்சு!

வடமராட்சி கிழக்குக்கு அப்பால் சுண்டிக்குளம் கரையோரப் பகுதியில் இருந்த விடுதலைப் புலிகளின் தளங்கள் மீது வார இறுதியில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்—

புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்ட போதிலும் அது குறித்து விவரங்கள் உடன் தெரியவரவில்லை என்றும் —

அரசுத் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது. (உ-3)

### கொடிகாமத்தில் புலிகள் தாக்கு!

யாழ்ப்பாணம், கொடிகாமத்தில் பாதுகாப்புப் படையினரின் வட - தென்பகுதி முன்னணிக் காவல் நிலைகள் மீது புலிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

படையினர் தாக்குதலை முறியடித்ததாகவும் —

புலிகள் தரப்பில் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதாகவும் —

புலிகளின் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகவும் —

அரசுத் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது

(உ-3)

### வெலிஓயாவில் மோதல்

வெலி ஓயா (மணலாறு) ஜானகபுரவில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாக அறிவிக்கப் படுகின்றது.

இந்த மோதல் சம்பவத்தில் புலிகள் இருவர் உயிரிழந்ததாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

### விரட்டியடிப்பு

மட்டக்களப்பு— பொலன்னறுவை எல்லைப் பகுதியில் உள்ள மலையக்காடு, ரணமடு ஆகிய இரு கிராமங்களில் இருந்த சுமார் முன்னூறு தமிழ்க் குடும்பங்கள் குண்டர் குழுக்களினால் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டிருப்பதாக 'வெரித்தாஸ்' வானொலி அறிவித்தது.

வெளியேற்றப்பட்ட தமிழ்க் குடும்பங்கள் மண்டூர் 13, 14 ஆம் கொலனிகளில் தஞ்சம் அடைந்துள்ளார்கள் என்றும் அறிவிக்கப்பட்டன.

### ஆனையிறவில் புலிகள் மீது தாக்குதல்!

கொழும்பு, ஒக். 21

ஆனையிறவில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் நேற்று முன்தினம் அதிகாலை அப்பகுதியில் விடுதலைப் புலிகள் சிலர் நடமாடுவதை அவதானித்ததை அடுத்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் —

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் ஒருவர் உயிரிழந்ததாகவும் —

அரசுத்தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் உயிரிழந்த புலிப்போராளி ஒருவரின் சடலத்தையும் இரண்டு கைக் குண்டுகளையும் தாங்கள் கைப்பற்றியதாகவும் அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டது.

### மட்டக்களப்பு பாடசாலையில் வெடி குண்டு!

மட்டக்களப்பு மாவட்டம் ஆரைப்பற்றில் உள்ள பாடசாலை ஒன்றின் மலசல கூடத்தில் மர்மப் பார்சல் ஒன்று கிடப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்று தேடுதல் நடத்திய 'ரெலோ' உறுப்பினர் ஒருவர், அந்த மர்மப் பார்சலைக் கண்டெடுத்த போது அது வெடித்ததாகக் கூறப் படுகின்றது.

அதனால் கையில் படுகாயமுற்ற அந்நபர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். (உ-3)

### 1000 அகதிளை திருப்பி அனுப்ப சுவிஸ் முடிவு?

சுவிஸில் அகதிகளாகத் தங்கியுள்ள சுமார் ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைகுத் திருப்பி அனுப்ப சுவிஸ் முடிவு செய்திருக்கின்றது என இலங்கை வானொலி அறிவித்தது.

அங்கு அலுவலகம் நடத்தி வந்த விடுதலைப் புலிகளின் தலைவர் ஒருவரைக் கைது செய்துள்ள அந்நாட்டுப் பொலீஸார் அங்கு புலிகள் நடத்தி வந்த பத்துக் கடைகளை மூடியிருப்பதாகவும் இலங்கை வானொலி அறிவித்தது. (உ-3)

### நவிண்டிலில் கிரனேட் வீச்சு!

வடமராட்சி, ஒக். 21

வடமராட்சி நவிண்டில் பகுதியில் நேற்று முற்பகல் 11மணியளவில் வீதியில் மோட்டார் [illegible] சென்று கொண்டிருந்த [illegible]யினர் மீது கிரனேட் வீசப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புதியதொலைத்தொடர்பு நிலையத்தை தகர்க்க கிண்ணியாவில் முயற்சி!

திருகோணமலை, ஒக். 21

திருகோணமலை மாவட்டம் கிண்ணியாவில் இருநூறு புதிய தொலைபேசி இணைப்புக்களைக் கொண்ட தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையத்தைத் தகர்க்கச் சென்ற இரண்டு பேரில் ஒருவரை அப் பகுதியில் காவல் கடமையில் இருந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து சுட்டுக் கொன்றதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

அடுத்த வாரம் சம்பிரதாய பூர்வமாகத் திறக்கப்படவிருந்த இந்த நிலையத்தைத் தகர்ப்பதற்கு எடுத்துச் செல்லப்பட்ட வெடிப் பொருள்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் —

கடந்த புதன்கிழமை இரவு மூதூர் நகரிலிருக்கும் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தில் காவலுக்கு இருந்த பொலீஸார் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொரு பொலீஸ்காரர் காயமடைந்தார். (உ-3)

## இலங்கையை நோக்கி புலிகளின் ஆயுதக் கப்பல்!

### இலங்கை - இந்திய விமானங்கள் தேடுதல் வேட்டை

கொழும்பு, ஒக். 21

விடுதலைப் புலிகளுக்கு பெருந்தொகையான ஆயுதங்களையும் வெடிப் பொருள்களையும் ஏற்றிக் கொண்டு கிழக்கு ஐரோப்பாவில் இருந்து ஆயுதக் கப்பல் ஒன்று இலங்கையை நோக்கிப் புறப்பட்டுள்ளது.

சர்வதேச பொலீஸ் அமைப்பான 'இன்டர்போல்'. இது தொடர்பான எச்சரிக்கைத் தகவலை இலங்கை அரசுக்கு அனுப்பி வைத்திருப்பதாக இலங்கை வானொலி அறிவித்தது.

இது தொடர்பாக இலங்கை வானொலி மேலும் தெரிவித்ததாவது:—

வெளிநாடுகளில் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து சர்வதேச பொலீஸ் அமைப்பான இன்டர்பேரின் கொழும்புக் கிளை இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கு அவ்வப் போது தகவல்களைக் கொடுத்து வருகின்றது.

வெளிநாடுகளில் வதியும் தமிழர்களிடமிருந்து அவர்களின் விருப்பத்தின் பேரிலோ, கட்டாயத்தின் பேரிலோ சேகரிக்கப்பட்ட கோடிக் கணக்கான டொலர் பணத்தில் இருந்து ஆயுதங்களைப் புலிகள் கொள்வனவு செய்து வருகின்றார்கள்.

இலங்கை — இந்தியா

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பூநகரி ஞானிமடத்தில் அமுக்கவெடியில் சிக்கி மாட்டுவண்டி சிதறியது!

#### தந்தையும், மகனும் உயிரிழப்பு

பூநகரி ஞானி மடத்தடிப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த அமுக்க வெடியில் மாட்டு வண்டி ஒன்று சிக்கியதில் அதில் பயணம் செய்த தந்தையும், மகனும் பலியாகினர்; மற்றொருவர் படுகாயமடைந்தார்.

செய்தி ஏஜென்ஸி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

[illegible] (வயது 36) என்பவரும் அவரது மகனான சுதர்சன் (வயது 18) என்பவருமே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

இவர்களுடன் கூடச்சென்ற கார்த்திகேசு என்பவர் படுகாயமடைந்தார் என்று அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை.

பூநகரிப் பகுதியிலிருந்து சில தினங்களுக்கு முன்னர்தான் அரசுப் படைகள் வெளியேறியிருந்தன என்பது தெரிந்ததே. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவத் தளபதியாக வர பிரபாவே பொருத்தமானவர் என்றார் பிரேமா!

## தொண்டா வெளியிடும் தகவல்

கொழும்பு, ஒக். 21

''விடுதலைப் புலிகள் இயக்கத்தை அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடத்திவந்ததாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ கருதினார். எனவே நாட்டின் இராணுவத் தளபதி பதவிக்கு மிகவும் பொருத்தமான நபர் பிரபாகரனே என்று பிரேமதாஸ நம்பினார்.''

—கால்நடை, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமான் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் புதிய தமிழ் வார இதழான ''நவமணி'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே தொண்டமான் இதைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு தற்போதைய அரசு பலம் வாய்ந்த தலைவர் ஒருவரை அனுப்பியிருந்தால் நிலைமை மாற்றமடைந்திருக்கும் என்றும் அந்தப் பேட்டியில் தொண்டமான் கூறியுள்ளார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு அமைச்சர் ஹமீத் அனுப்பப்பட்டிருந்தார்.

அவருக்குப் பதிலாக ரஞ்சன் விஜேரத்தினாவை அனுப்பியிருந்தால் இந்த நிலைமை முற்றாக மாறியிருக்கும் என்றும் அமைச்சர் தொண்டமான் சுட்டிக் காட்டினார்.

இவை குறித்து முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ தமக்கு நேரில் விளக்கிக் கூறினார் என்றும் அமைச்சர் தொண்டமான் இப்பேட்டியில் குறிப்பிட்டார்.

(உ-3)

## நிவாரணம் வழங்குமாறு யாழ். செயலகம் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யுமாறு பிரதேச செயலர்களை யாழ் செயலகம் கேட்டுள்ளது.

நிவாரணம் வழங்கத் தேவையான பொருள்களை விநியோகிப்பதற்குப் புனர்வாழ்வுப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளதாகவும்—நிவாரணம் வழங்கத் தேவையான ஏற்பாட்டை உடன் செய்யுமாறும்-கோரப்பட்டுள்ளது.

உணவு முத்திரை கொழும்பில் இருந்து வர தாமதமாவதால் முன்பு வழங்கப்பட்ட உணவு முத்திரை அடிக்கட்டையில் பதிந்து தொடர்ந்து நிவாரணத்தை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-3)

## மானம்பு திருவிழா

யாழ்ப்பாணம், ஒக் 21

நவராத்திரி விழா நடைபெற்ற ஆலயங்களில் இன்று மாலை மானம்புத் திருவிழா நடைபெறும். வாழைவெட்டு நிகழ்வுகளும் இடம்பெறும்.

காரைநகர் மணற்காடு அம்மன் ஆலய மானம்பூத் திருவிழா இன்று மாலை 6 மணிக்கு நடைபெறும். அபிஷேக ஆராதனைகள் நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகும்.

வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலய மானம்பு திருவிழாவில் அம்பாள் இன்று பி. ப. 2-30 மணிக்கு எழுந்தருளி சங்கரத்தை இலுப்பையடி வைரவர் ஆலயத்தைச் சென்றடைந்ததும் அங்கு வாழைவெட்டு நிகழ்வு இடம்பெறும்.

(அ)

## ஓவியப் போட்டி முடிவு திகதி நீடிப்பு

போட்டியாளர்கள் பலரின் வேண்டுகோள்களுக்கு இணங்க, உலக உள நாளை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட ஓவியப் போட்டியின் முடிவு திகதி 31.10.96 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

உதயன் பணிமனையிலும், சாந்திகம் அலுவலகத்திலும் உங்கள் ஓவியப் படைப்புகளை நேரில் ஒப்படைக்கலாம்.

விவரங்களுக்கு 15.10.96 ஆம் திகதிய உதயனைப் பாருங்கள்.

## நவராத்திரி நிகழ்வுகள்

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் நவராத்திரி விழா பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு சங்கீதம், வயலின், பரதம் ஆகியவற்றுக்கான வித்யாரம்பம் நடத்தி வைக்கப்படும். (உ)

★ ★ ★

உரும்பிராய் வடக்கு பேய்ச்சியம்மன் ஆலயத்தில் விஜயதசமி தினமாகிய இன்று பிற்பகல் 3 மணிக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து பூசை வழிபாடுகளும் இடம்பெறும்.

★ ★ ★

சங்கானை உதவி அரச அதிபர் பணிமனையில் இன்று மு. ப. 10 மணிக்கு வாணி விழா நடைபெறவுள்ளது. பதில் உதவி அரச அதிபர் எஸ் புத்திரசிகாமணி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் மு. மாசிலாமணி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (அ)

★ ★ ★

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் இன்று மு. ப. 10 30 மணிக்கு வாணி விழா நடைபெறும். (அ-3)

கைதடி விக்னேஸ்வர வித்தியாலயத்தில் நாளை மு. ப. 11 மணிக்கு வாணி விழா நடைபெறவுள்ளது. (அ)

★ ★ ★

கரம்பொன் மகாவித்தியாலயத்தில் இன்று முற்பகலில் விஜயதசமி விழாவும், வித்தியாலய நிறுவுனர் மகாதேவ சுவாமிகளின் ஜயந்தி தினமும் நடைபெறவுள்ளன. (அ-3)

★ ★ ★

நவராத்திரி விழாவை ஒட்டி நுணாவில் மத்தி இந்து இளைஞர் மன்றம் நடத்தியபோட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு இன்று பரிசுகள் வழங்கப்படும். நுணாவில் மத்தி கந்தசாமி ஆலயத்தில் இன்று பி. ப. 2.30 மணிக்கு நடைபெறும் இவ்விழாவில் புதிதாக சமய நூல் நிலையம் ஒன்றும் திறந்து வைக்கப்படும். (அ)

★ ★ ★

தென்மராட்சி பிரதேச செயலகம், சாவகச்சேரி நகர சபை ஆகியவற்றின் ஊழியர் நலன்புரிச் சங்கங்கள் நடாத்தும் வாணி விழா இன்று நடைபெறும். (உ-117)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் நவராத்திரி விழா மருதனார்மடத்தில் உள்ள அதன் வளாகத்தில் இன்று விமரிசையாக நடைபெறும். கலாநிதி சபா. ஜெயராஜாவின் உரை, செல்வி பங்கயற்செல்வியின் இசைக் கச்சேரி, செல்வி சுஜிதா நாதனின் வயலின் இசை நிகழ்ச்சி, செல்வி ஜனனி சொக்கலிங்கத்தின் வீணை இசை நிகழ்ச்சி ஆகியவை விழாவில் இடம் பெறும். (உ)


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற் குழுவின் அவசரக் கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை (22 - 10 - 96) பி.ப. 2-00 மணிக்கு (பழைய நேரம்) கல்லூரியில் நடைபெறும். முக்கிய விடயங்கள் ஆராயப்பட இருப்பதனால் செயற்குழு உறுப்பினர்களைத் தவறாது சமுகமளிக்கும்படி கோருகின்றோம்.

நன்றி.

தலைவர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

1996 - 10 - 20 (C/3319)


## மரண அறிவித்தல்கள்

### விசுவலிங்கம் மயில்வாகனம்

(வர்த்தகர், வழக்கம்பரை)

பண்ணாகத்தைச் சேர்ந்த விசுவலிங்கம் மயில்வாகனம் (வர்த்தகர், வழக்கம்பரை) 18 - 10 - 96 அன்று காலமானார். அன்னார் நேசமலரின் அன்புக் கணவரும், வனிதா (விக்ரோறியாக் கல்லூரி), சாந்தினி (வேம்படி மகளிர் கல்லூரி), சிரஞ்ஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி விசுவலிங்கத்தின் அன்பு மகனும், கிருஷ்ணசாமி (கொழும்பு), கனகமணி வயிரமுத்து (கனடா), திலகவதி திருவாதவூரர் (மல்லாவி), துரைசிங்கம் (சங்கானை ப. நோ. கூ. சங்கம்), மகாதேவன் (வட்டு.இந்துக் கல்லூரி) ஆகியோரின் சகோதரரும், நடராசாவின் மருமகனும், கிருஷ்ணமூர்த்தியின் (ஜேர்மனி) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 19 - 10 - 96 நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
வி. துரைசிங்கம்

(43267)

### தம்பிமுத்து பாலசிங்கம்

நயினாதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் அத்தியடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான தம்பிமுத்து பாலசிங்கம் 20-10-96 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து தம்பதிகளின் புத்திரனும், காலஞ்சென்ற மு. வேலுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், சகுந்தலாதேவி (ஆசிரியை), ஏகாந்தராசா (பொறியியலாளர் லண்டன்), சிவபாலராஜா (C,D,O லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைராஜசிங்கம் (ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்), பத்மாசனி (டாக்டர்), பிரேமலதா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சசிகுமார், (பொறியியலாளர், லண்டன்), கோகுலன் (யாழ். மருத்துவபீடம்), ராகுலன், நகுலன் (பரியோவான் கல்லூரி), விதுசன் (லண்டன்), பிரதீசன் (லண்டன்), சாயீசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, கனகலிங்கம் (ஓய்வு பெற்ற மருந்தாளர்), சதாசிவம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற இராகுப்பிள்ளை, மனோன்மணி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கற்பகம், பரமேஸ்வரி, திலகவதி (ஓய்வு பெற்ற ஆசிரியை) லீலாவதி, இராசநாயகம் (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்), அன்னலெட்சுமி, பூபாலசுந்தரம் B.Sc. (லண்டன்), சுந்தரேஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற நாகமுத்து, விசாலாட்சி (ஆசிரியை லண்டன்), கதிரவேலுப்பிள்ளை (மாவட்ட நீதிபதி) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21-10-96 அத்தியடி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மு.ப. 11.00 மணிக்கு கொட்டடி வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.ந. துரைராஜசிங்கம்
(மருமகன்)

30/10, பிள்ளையார் குறுக்கு வீதி,
அத்தியடி.
யாழ்ப்பாணம்.

(43377)


MAJURI
HOME SCIENCE ACADEMY
மயூரி ஹோம் சயன்ஸ் அக்கடமி
NAVALAR ROAD, ANAIPANTHY, JAFFNA.

DIPLOMA IN HOME SCIENCE
மனையியல் டிப்ளோமா வகுப்புகள்

இன்று விஜயதசமியை முன்னிட்டு
21-10-1996 (திங்கள்) காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

★ கேக் ஐசிங் (Cake Icing)
★ பூ வேலை (Flower Making)
★ சமையற்கலை (Cookery)
★ தலையலங்காரம் (Hair style)
★ தையற்கலை (Dress making)
★ கைப்பணி வேலை (Handicraft)
★ கோலம் (Kolam)

குறிப்பு:
★ மேற்படி பயிற்சிகள் 6 மாதங்களில் கற்பிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்படும்.
★ சகல பாடங்களும் எடுப்பவர்களுக்கு கோலம் இலவசமாக பயிற்றுவிக்கப்படும்.

விவரங்கட்கு:
NEW NAVALAR EDUCATION CENTRE
NAVALAR ROAD, ANAIPANTHY, JAFFNA.
(43280)



A/L
கணக்கியல்
விசேட பிரத்தியேக வகுப்பு
By
S. B. சுதாகர்
★ பிரதான வீதி, சித்தன்கேணி டச்றோட் முன்பாக.
★ சிவன்மாளிகை, திருநெல்வேலி (சிவம் மாஸ்ரர்).
(43278)



பாரதி
சித்தன்கேணி
A/L 96
DAY CLASS
ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
பொருளியல் - திரு. சண்
வர்த்தகம் - திரு. பசில்
கணக்கியல் - திரு. சதீஸ்
அளவையியல் - திரு. R. P. சர்மா
தமிழ், இந்துநாகரிகம் - திரு. பாலா
இந்துசமயம்- [illegible]
நாடக அரங்கியல்- திரு. சந்திரன்
(43279)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# முல்லைக் கடலில் புலிகளின் ஆயுதக்கப்பலை தகவல் கிடைத்தும் பிடிக்க முடியவில்லை!

## ஜூலைத் தாக்குதல்களின் பின்னணி

பகுதி - 2

தொகுப்பு: கவி

கடந்த நவம்பருடன் யாழ். குடாநாட்டின் வலிகாமம் பகுதியை விட்டு வெளியேறிய புலிகள் அந்தக்கையோடே தமது ஆளணிக் கட்டமைப்பை மெல்ல மெல்ல வன்னிப் பெருநிலப் பரப்புக்கு இடம் மாற்றத் தொடங்கினர்.

கடந்த ஏப்ரல் நடுப்பகுதியில் குடாநாட்டின் பெரும் பகுதியில் தமது ஆட்சி அதிகாரத்தை விடுதலைப் புலிகள் இழந்த போதிலும், தங்களின் ஆளணிக்கட்டமைப்பை அவர்கள் சிதற விடவில்லை.

1987 ஒக்ரோபரில் இந்திய அமைதிப் படையுடனான மோதல்கள் ஆரம்பித்த போது தமது ஆளணிக் கட்டமைப்பை புலிகள் சிதற விட்டதால் அதனை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு அவர்களுக்கு நீண்ட காலம் அப்போது எடுத்தது. ஆனால் புலிகள் இம்முறை குடாநாட்டை கைவிட்ட போதிலும் அத்தகைய ஆளணிக் கட்டமைப்பு சிதறும் சேதம் அவர்களுக்கு ஏற்படவில்லை. குடாநாட்டில் இருந்தது போன்ற கட்டமைப்பை அவர்களால் அப்படியே வன்னிப் பெருநிலப் பரப்பிலும் பேண முடிந்தது.

### புலிகள் காத்திருந்தது ஏன்?

அப்படி இருந்தும் —

வன்னிப் பெருநிலப் பரப்புக்கு நகர்ந்த கையோடு முல்லைத்தீவு முகாமைத் தாக்காமல், அதற்காக பல மாதங்கள் காத்திருக்க வேண்டிய தேவை புலிகளுக்கு ஏற்பட்டது ஏன்?

தாக்குதலுக்கான தயாரிப்பு வேலைகளுக்கு காலம் எடுத்திருக்கலாம் என்று காரணம் கூற முற்பட்டாலும் கூட —

தாக்குதலுக்குத் தேவையான ஆயுதங்களைத் திரட்டுவதற்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது என்பதே முக்கியமானதாகும்.

இராணுவ நகர்வு ஒன்றைத் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தும் தாக்குதலோ அல்லது முன்னணிக் காவலரணை அல்லது காவலரண் தொடரைத் தாக்கும் ஒரு நடவடிக்கையோ அல்ல இது. நீண்ட காலம் நிலைத்திருக்கும் — வலுவான — ஒரு முகாமைத் 'துடைத்தெறியும்' நோக்கம் கொண்ட ஒரு தாக்குதல் இது என்று விடுதலைப் புலிகள் திட்டம் தீட்டியதால் அதற்கான ஆயுத தளபாட வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது.

அத்துடன் இத்தாக்குதலில் வெற்றி பெற வேண்டுமாயின் முல்லைத்தீவு முகாம் மீது எதிர்பாராத சமயத்தில் ஒரேயடியாக மழை போல் ஷெல்களைப் பொழிந்து முகாமில் இருக்கும் படையணியை பீதி, திகில் அடைய வைத்து சிதறடிக்கச் செய்வதே ஒரே வழி எனத்தாக்குதலுக்குத்திட்டம் வகுத்தவர்கள் கருதினர்.

அதற்குச் சில மணி நேரமாவது பல பக்கங்களிலிருந்தும் விடாது ஷெல் மழை பொழிவதற்குப் பல நூற்றுக் கணக்கில் ஷெல்கள், பீரங்கிகள், றொக்கட்டுகள் தேவைப் பட்டன.

இது தவிர, முகாமைத் தாக்கும் பெரும் அணிக்கு மேலதிகமாக —

அந்த முகாமுக்கு கடல் வழியாகவும், தரை வழியாகவும், வான் வழியாகவும் உதவிக்கு வரக்கூடிய மீட்பு அணிகளை (Rescue Teams) எதிர் கொள்ளக் கூடிய தாக்குதல் குழுக்களையும் தயார்படுத்தி வைத்திருக்க வேண்டிய அவசியமும் புலிகளுக்கு இருந்தது.

இத்தகைய தாக்குதல் அணிகளுக்கு தாராளமாக ஆயுதங்கள் வழங்கப்படாவிட்டால் தமது நோக்கத்தை அடைவது சாத்தியமற்றது எனப் புலிகள் கருதியதால் ஆயுதங்களைத் திரட்டும் வேலைகளுக்குக் காலத்தைச் செலவிட வேண்டியதாயிற்று.

### புலிகளின் ஆயுதக் கப்பல்

அந்த முயற்சியின் ஒரு கட்டமாகவே ''கொமெக்ஸ் ஜொக்ஸ் — 3'' என்ற புலிகளின் கப்பல் ஆயுதங்களுடன் கடந்த பெப்ரவரியில் இலங்கை நோக்கி வந்தது எனக் கூறப்படுகின்றது.

கிழக்கு கடற்பிரதேசத்திற்கு வந்த இந்தக் கப்பலை இந்திய கடற்படை குறி வைத்துக் கண்டு பிடித்ததை அடுத்து, இந்தியக் கடற்படையின் உதவியுடன் இலங்கைக் கடற்படை, விமானப் படை ஆகியவை ஒன்றிணைந்து முல்லைத் தீவுக் கடற்கரையோரத்திற்கு சில மைல்களுக்கு அப்பால் வைத்து அதனைத் தாக்கி அழித்தன.

இத்தாக்குதலில் இந்தியக் கடற்படை நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கிறது எனப் புலிகள் குற்றம் சுமத்தியிருந்ததும் நினைவிருக்கலாம்.

### அடுத்த கப்பல் தப்பியது

இந்தியத் தரப்பின் கபட வேலையால் தமது முதல் முயற்சி தோற்ற பின்னர் இன்னொரு கப்பலில் ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு வந்து சேர்ப்பதற்காகப் புலிகள் காத்திருந்தனர்.

இலங்கைக் கடற்படையின் பெருந் தவறினால் இந்தத் தடவை புலிகள் ஆயுதங்களைக் கொண்டுவந்து சேர்க்கும் தமது முயற்சியில் வெற்றி பெற்றனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

அது நடந்தது கடந்த மே மாதம் 9ஆம் திகதியாகும்.

அன்றைய தினம் மாலை 5.00மணிக்கு (பழைய நேரப்படி) முல்லைத் தீவுக்கு 47 மைல் தொலைவில் பாரிய கப்பல் ஒன்றை இலங்கை விமானப்படை விமானம் ஒன்று கண்டது.

பெப்ரவரியில தாக்கி அழிக்கப்பட்ட புலிகளின் ஆயுதக் கப்பல் போன்று பெரிதாகக் காணப்பட்ட இந்தக் கப்பலிலிருந்து மூன்று படகுகளுக்கு பொருள்கள் இறக்கப்படடுக் கொண்டிருப்பதையும் விமானி அவதானித்தார்.

### விமானத்தை நோக்கி வேட்டுக்கள்

இதனையடுத்து அக்கப்பலை நெருங்கி, தாழப் பறந்து கப்பலை நோட்டமிட விமானம் முயன்ற போது மூன்று படகுகளில் இருந்தும் விமானத்தை நோக்கி வேட்டுகள் பொழியப்பட்டன.

இதனால் கலவரமடைந்த விமானி, தனது தாக்குதல் முயற்சியைக் கைவிட்டு வானொலி சமிக்ஞை மூலம் உதவி கோரினார்.

இது பற்றிய அவசர தகவல் அனுராதபுரத்தில் தரித்து நின்ற 'புக்காரா' தாக்குதல் விமானத்தின் ஸ்குவாட்ரனுக்கும், கடற்படையின் கிழக்குத் தலைமையகத்துக்கும் உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது.

'புக்காரா' விமானங்கள் உடனடியாக குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்து கப்பலை நோக்கித் தாக்குதலை நடத்திய போதும், கப்பலுக்கு அருகில் நின்ற படகுகளில இருந்து விடாது குண்டுகள் பொழியப்பட்டதால் கப்பலையோ, படகுகளையோ, புக்காரா விமானத்தால் மூழ்கடிக்க முடியாமல் போயிற்று. எனினும் அவற்றுக்கு சிறிதளவு சேதத்தை 'புக்காரா' ஏற்படுத்தியது.

இத்தாக்குதலில் ஒரு படகு மூழ்கடிக்கப்பட்டதாக விமானப்படை பின்னர் அறிவித்த போதிலும், அது தவறு என்பதை விமானப் படை விமானிகள் தனிப்பட்ட முறையில் பின்பு ஒப்புக் கொண்டனர்.

### புலிகளின அதிர்ஷ்டம்

படைகளின் துரதிர்ஷ்டமோ அல்லது புலிகளின் அதிர்ஷ்டமோ அச்சமயம் அப்பிரதேசத்தில் கடற்படையின் தாக்குதல் கலம் ஏதும் காணப்படவில்லை. அதாவது கடற்படையின் பீரங்கிப் படகுகளும், அதிவேகத் தாக்குதல் படகுகளும் அப்பிரதேசத்துக்கு வருவதாயின் அங்கிருந்து சுமார் அறுபது கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் திருகோணமலையிலிருந்து தான் அப்போது வரவேண்டியிருந்தது.

> முல்லைத்தீவு முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் பற்றிய கட்டுரைத்தொடரின் இரண்டாம் பகுதி இது (ஆர்)

விமானப்படையின் முதல் விமானம் புலிகளின் ஆயுதக் கப்பலைக் கண்டுபிடித்து சரியாக ஐந்து நிமிட நேரம் கழித்து மாலை5.05 மணிக்கு,



கரும்புலி மில்லர்

கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதி றியர் அட்மிரல் ரி. கே. திஸநாயக்கா கொழும்பு கடற்படைத் தலைமையகத்துக்கு அவசர தொலைபேசி அழைப்பு ஒன்றை எடுத்து நிலைமையை சுருக்கமாக — வேகமாக — எடுத்துரைத்தார்; கடற்படையின் அவசர உதவியை விமானப்படை கோருவதைத் தெளிவுபடுத்தினார்.

புலிகளின் கப்பலைத் தகர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தறியர் அட்மிரல் திஸநாயக்கா, தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கடற்படைக் கலங்கள் அனைத்தையும் திருகோணமலைக் கடற்தளத்திலிருந்து அவசரமாக சம்பந்தப்பட்ட இடத்துக்கு அனுப்பி தாக்குதலை விரைவுபடுத்த கடற்படைத் தலைமையகத்தின் அனுமதியைக் கோரினார்.

அவ்வேளை, கடற்படையின் உயரதிகாரிகள் அனைவரும் கடற்படை தலைமையக ஒன்றுகூடலில் அன்றயில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்கள் முன்னிலையில் தான் கிழக்குக் கடற்படைத் தளபதியின் அவசர தொலைபேசி அழைப்பை ஏற்று அவருடன் கடற்படை உயர்மட்ட அதிகாரி தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தார்.

முன்னர் புலிகளின் ''கொமெக்ஸ் ஜொக்ஸ்-3'' கப்பலை தாக்கி அழித்ததில் கடற்படைக்குக் கிடைக்கவேண்டிய நற்பெயரை விமானப்படை தட்டிக் சென்றதாலும் —

அன்று வேறுவிடயங்களாலும் —

எரிச்சலடைந்திருந்த அந்த உயர்மட்ட அதிகாரி, கிழக்குக் கடற்படைத் தளபதியின் அவசர அனுமதிக் கோரிக்கையை அடியோடு நிராகரித்து விட்டார்.

''விமானப்படை அந்தக் கப்பலைக் கண்டுபிடித்ததால் அது பற்றி விமானப்படையே கவனம் எடுக்கட்டும்.

''கடற்படை அது குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. இப்போது யாழ்ப்பாணத்துக்குச் சென்று கொண்டிருக்கும் படகுகள்—கப்பல்கள் அணிக்கு கடற்படையின் பெரும்பகுதித் தாக்குதல் படகுகள் பாதுகாப்பாகச் சென்று கொண்டிருப்பதால்— அப்பணி முக்கியமானது என்பதால்— அத்தாக்குதல் படகுகளை வேறு வேலைக்கு திசைதிருப்ப முடியாது''—என்று அந்த உயர்மட்ட அதிகாரி திட்டவட்டமாகக் கூறினார்.

### மன்றாட்டம்

ஆனால் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி விடவில்லை. எதிரியின் ஆயுதக் கப்பலை அழிப்பதே முக்கியமான வேலை என்பதால் அதற்கு உடனடியாக அனுமதி தரும்படி தனது மேலதிகாரியிடம் மன்றாடினார்.

''கப்பலில் இருக்கக் கூடிய ஆயுதங்கள் பயங்கரமானவை. அவை பின்னர் எமக்கு மோசமான விளைவுகளைத் தரக் கூடும்''—என்று அவர் வாதிட்டார். ஆனால் அவரது கோரிக்கை ஏற்கப்படவில்லை. கடற்படை உயரதிகாரி, கிழக்குக் கடற்படைத் தளபதியின் ''அலட்டலுக்கு'' தொடர்ந்து செவி கொடுக்க விரும்பாது தொலைபேசியை வைத்து விட்டார்.

எனினும் கிழக்குக் கடற்படைத் தளபதி விடவில்லை. தனக்குக் கீழ் உள்ள தாக்குதல் படகுகளை சம்பந்தப்பட்ட இடத்துக்கு விரைந்து அனுப்ப அனுமதி கோரி பல இடங்களுடன் தொடர்பு கொண்டார் ஆனாலும் அவர் முயற்சி பலிக்கவில்லை.

சரியாக இரவு 7 00 மணி. அதுவரை கப்பலைத் தாக்கி அழிக்கும் முயற்சியில் ஈடுபட்ட ''புக்காரா'' இருட்டுப்பட்டதால் தனது முயற்சி வெற்றியளிக்காத நிலையில் மீண்டது.

### ஜனாதிபதிக்கு தகவல் எட்டியது

அப்போதுதான் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியின் நிலைமை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் எம். பி. ஒருவரின் காதுகளுக்கு எட்டியது. அவர் உடனயாக அலரி மாளிகையில் இருந்த ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார்.

ஜனாதிபதி உடனே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையைத் தேடினார் ஆனால் ரத்வத்தை அச்சமயம் கொழும்புக்கு வெளியே சென்றிருந்ததால் ஜனாதிபதி தானே நேரடியாக விடயத்தில் தலையிட்டார். திருமலையில் இருந்த முழு கடற்படைத் தாக்குதல் அணியையும் சம்பவ நடந்த இடத்துக்கு விரையும்படி ஜனாதிபதி உத்தர விட்டார்.

சரியாக 7.00 மணிக்கு சற்றுப் பின்னர் அரை டசினுக்கும் அதிகமான தாக்குதல் படகுகள் திருகோணமலையிலிருந்து விரைந்தன; புலிகளின் ஆயுதக் கப்பலைத் தேடிப்பறந்தன.

### கப்பல் தப்பியது

ஆனால் காலம் பிந்தி விட்டது.

இருள் சூழ்ந்து விட்டதால் அந்த இருளில் புலிகளின் ஆயுதக் கப்பலை கடற்படைக் கப்பல்களால் தேடிப்பிடிக்க முடியவில்லை.

பல நூறு தொன் ஆயுதங்களை முல்லைத்திவு கடலில் இறக்கிக் கொடுத்து விட்டு புலிகளின் ஆயுதக் கப்பல் மாயமானது.

அதிலிருந்து இறக்கப்பட்ட துப்பாக்கிகள், மோட்டர்கள், பீரங்கிகள் போன்றவை தான் முல்லைத்தீவு தாக்குதலுக்கு நிச்சயமாகப் பயன்படுத்தப்பட்டன என்று அடித்துக் கூறுகின்றது கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று.

கடற்படையினர் தமது தாக்குதல் படகுகளை நேரத்துடன் அனுப்பியிருந்தார்களேயானால் புலிகளின் ஆயுதக் கப்பலும், அதிலிருந்து ஆயுதங்களைப் பெற்றுக் கொண்ட படகுகளும் நிச்சயம் தாக்கி அழிக்கப்பட்டிருக்கும் என்றும் மேலும் கூறுகின்றது அப்பத்திரிகை.

ஆனால் இதில் ஆச்சரியப் படத்தக்க வைக்கும் விடயம் என்னவென்றால் தனது கடமையை சரிவரப் புரியத் தவறிய — சம்பந்தப்பட்ட — கடற்படை உயரதிகாரிக்கு எதிராக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப் படவில்லை என்பதுதான்.

★ ★ ★

### இரண்டு மாதம் காத்திருந்தது ஏன்?

மே மாத முற்பகுதியில் தேவையான ஆயுதங்களை முல்லைத்தீவு கடற்பிரதேசம் ஊடாக பாதுகாப்பான தமது தளங்களுக்குக் கொண்டு வந்து சேர்த்த பின்னரும் கூட— உடனடியாகத் தமது தாக்குதலை புலிகள் ஆரம்பிக்கவில்லை. இரண்டு மாதம் காத்திருந்து ஜூலையில் தான் நடத்தினார்கள். இத் தாக்குதலை புலிகள் ஜூலையில் நடத்தியதற்கு பல காரணங்கள், பின்னணிகள் உள்ளன.

புலிகளைப் பொறுத்த வரை ஜூலையில் இரண்டு தினங்கள் அவர்களுக்கு முக்கியமானவை.

இரண்டும் 'கறுப்பு' என்ற பெயருடன் சம்பந்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் முதலாவது கரும்புலி கப்டன் மில்லரின் தற்கொலைத் தாக்குதல் இடம் பெற்றது இந்த ஜூலை மாதத்தில்தான்.

1987 இல் 'ஒப்பரேசன் லிபரேசன்' படை நடவடிக்கையை ஆரம்பித்து முன்னேறிய அரச படைகளை கதிகலங்க வைத்த முதலாவது கரும்புலித் தாக்குதலை நடத்தியவர் தான் கப்டன் மில்லர். அவரின் நினைவாக அவர் சாவைத் தழுவிய ஜூலை 5 ஆம் திகதியை

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகேஸ்வர இல்லம்

(நவாலி, மானிப்பாய்)

## முக்கிய அறிவித்தல்

நாட்டில் ஏற்பட்ட சீர்குலைந்த சூழ்நிலையினால் மேற்படி இல்லம் 1995 ஆம் ஆண்டு ஐப்பசி மாத இறுதிப் பகுதியில் மூடப்பட்டது. இதனை மீளவும் **1—1—97** தொடக்கம் இயங்க வைப்பதற்கு மேற்படி இல்லத்தின் தர்மகர்த்தாசபை முயற்சி எடுக்கின்றது. இதற்கு முன்னோடியாக காரியாலயம் **1—11—96** தொடக்கம் காலை 8-30 மணி முதல் 1-30 மணி வரையில் தினமும் திறக்கப்பட்டிருக்கும்.

★ **அனாதைப் பிள்ளைகளின் பாதுகாவலர்களின் கவனத்திற்கு:**

1) 30-10-95 ல் இல்லத்திற் பராமரிக்கப்பட்ட பிள்ளைகளை மீளவும் சேர்ப்பதாயின் 1-11-96இன் பின் அலுவலருடன் தொடர்பு கொள்ளவும்.
2) 7 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கு மேற் கூறப்பட்ட கால எல்லையில் 20-12-96 இற்கு முன்னர் அலுவலரிடமிருந்து மனுப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து கையளிக்கவும்.

★ **நன்கொடைகளும் அன்பளிப்புக்களும்**

அசாதாரண சூழ்நிலையினால் இல்லத்திற்குரிய சமையலறைப் பாத்திரங்கள், மாணவர்கள் உபயோகித்த உடுபுடைவைகள், படுக்கை விரிப்புக்கள், பாத்திரங்கள் ஆகியவற்றை இழந்துள்ளோம்.

இவற்றை ஈடு செய்வதற்கு உகந்த பொருள்களாகவோ அல்லது அதனைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற நிதி உதவியையோ தர்ம சிந்தனையுடையவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும்.

நீண்ட காலமாக இல்லச் சிறார்களைப் பேணுவதற்கு நன்கொடைகளை வழங்கிய தருமசீலர்களை அவற்றைத் தொடர்ந்து செலுத்துமாறு வேண்டிக் கொள்கிறோம்.

★ **அலுவலர்கள்**

முகாமையாளர், பாடசாலை ஊழியர் பகுதிகளுக்கு தகுதி உடையோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முன்னர் இப்பதவிகளில் இருந்தோரும் மீண்டும் விண்ணப்பித்தல் அவசியம். மேற்படி விண்ணப்பங்களை 27-10-96 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக செயலாளருக்கு அனுப்பவும்.

(காசோலை மூலம் பணம் அனுப்ப விரும்புபவர்கள் காசோலைகளை ''மகேஸ்வர இல்லம், நவாலி, மானிப்பாய்'' எனவும், அக் கணக்கிற்கு மட்டுமே உரியது! என்றும் குறிப்பிடவும்)

சி. பத்மநாதன்
தலைவர்,
சின்னத்தம்பி அவனியூ,
மானிப்பாய்.

சொ. பாலகிருஷ்ணன்
செயலாளர்,
லோட்டன் வீதி,
மானிப்பாய்.

(43225)

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி பரம்சோதி கமலாதேவி

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

**திதி :— 21 - 10 - 1996**

தோற்றம்: 29 — 11 — 1937

மறைவு: 02—11—1995

இல்லத்தின் சோதி யிறைவனடி சேர்ந் தொன்றி
அல்லறுத் தோராண்டு ஆனதுவே - பல்லுயிர்க்கும்
பக்குவத்தை நல்கிப் பரம பதம் ஈந்தருளும்
நக்காவுன் பாதம் சரண்.

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''சந்திரவாசா''
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(சி/3281)

# நினைவு நாள் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 21

1987 ஆம் ஆண்டு யாழ் ஆஸ்பத்திரிக்குள் வைத்து இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட டாக்டர்கள், தாதிகள், ஊழியர்கள் உட்பட 21 பேரினதும் நினைவுநாள் இன்றாகும்.

இவர்களின் நினைவையொட்டி யாழ் ஆஸ்பத்திரியில் 21 ஊழியர்களினதும் திருவுருவப் படங்களுக்கு ஈகச்சுடரேற்றி ஊழியர்கள் இன்று நினைவு கூருவார்கள். (15)

# கௌரி விரதம்

கௌரி விரத நூல் பெற விரும்புபவர்கள் கந்தரோடை வற்றாக்கை அம்பாள் ஆலயத்தில் சங்கல்ப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆதீனகர்த்தா

(43274)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

## ★ செல்வன் பிரசோபன் ★

அல்வாய் வடக்கு சிவனேஸ்வரன - விஜிதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் பிரசோபன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (21 - 10 - 96) வெகுவிமரிசையாக நுணாவில் மேற்கு புஷ்ப இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

செல்வன் பிரசோபனை அன்பு அப்பா, அம்மா கொட்டாஞ்சேனை அப்பப்பா, அப்பம்மா, நுணாவில் அம்மப்பா, அம்மம்மா, இந்தியா ராஜன் பெரியப்பா குடும்பம், ஜேர்மன் பரமேஸ் பெரியப்பா குடும்பம், லண்டன் தேமா அத்தை குடும்பம், பிரான்ஸ் ரவி பெரியப்பா, ஜேர்மன் ஜெயா பெரியப்பா, லண்டன் சுகா பெரிப்பா. பிரான்ஸ் பாபி அத்தை குடும்பம், லண்டன் ராஜி அத்தை, சுவிஸ் ரவி மாமா, நுணாவில் பிரதீபன் மாமா, பிரகாஷ் மாமா, துணுக்காய் செல்வம் சித்தப்பா, இராசநாயகம் சித்தப்பா, பாட்டி, சின்ன அப்பாச்சி மற்றும் உற்றார், உறவினர்கள் அருள்மிகு அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்மாளின் அருள்பெற்று பல்கலையும் கற்று, நீடூழி வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

புஸ்பா இல்லம்,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(43257)

### சாவகச்சேரி பிரதேச சபை 1997 ஆம் ஆண்டிற்கான

# கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் இறைச்சிக் கடைகள், சந்தைகள் என்பனவற்றை 1997ஜனவரி மாதம் தொடக்கம் 1997 டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் 04-11-1996ஆம் திகதி முற்பகல் 10-00மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்களை சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை யலுவலகத்தில் 01-11-1996 நண்பகல் 12-30 வரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரமான மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும், மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை ''விசேட ஆணையாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்'' என்ற முகவரிக்கும் இணைப் பிரதியை ''உள்ளூராட்சி உதவி ஆணையாளர், தென்மராட்சி, பிரதேச செயலகம், சாவகச்சேரி'' என்ற முகவரிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் இன்னதுக்கான கேள்வி என எழுதி அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபால் மூலம் 04-11-1996ஆம் திகதி முற்பகல் 10-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது சாவகச்சேரிப் பிரதேச சபை தலைமைப் பணிமனையிலுள்ள கேள்விப் பெட்டியினுள் இடுவதன் மூலம் கிடைக்கச் செய்யவும். கேள்விப் பத்திரங்கள் 05-11-1996ஆம் திகதி முற்பகல் 10-00மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை தலமைப் பணிமனையில் வைத்து திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகம் கொடுக்கலாம்.

கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் தம்முடன் தேசிய அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும். கேள்விப்பத்திரங்களைப் பெறத் தகுதியற்றவர் எனக் கருதப்படும் ஒருவருக்கு விசேட ஆணையாளரால் கேள்விப்பத்திரங்கள் வழங்காது விடப்படலாம். கடந்த காலத்தில் குத்தகைப்பணம் செலுத்தத் தவறியவர்களுக்கு எக்காரணம் கொண்டும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் மாத்திரம் குத்தகையை ஏற்று நடத்த அனுமதிக்கப்படுவர். ஆள்மாறாட்டம் செய்யப்படுமிடத்து குத்தகையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு. இது சம்பந்தமாக மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபைப் பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். நிபந்தனைகளை மீறுமிடத்து கேள்விகளைப் பிற்போடவோ, இரத்துச்செய்யவோ விசேட ஆணையாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. கொல் களக்கட்டணம் அப்போதைய காலப்பகுதிக்கு அமைவாக செலுத்தப்படல் வேண்டும்.

## 1997 கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| **கச்சாய் உப பணிமனை** | | | |
| 1) கொடிகாமம் பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் | 7,60,000/- | 1,000/- | 250/- |
| 2) கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,00,000/- | 500/- | 250/- |
| 3) கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 10,000/- | 250/- | 150/- |
| 4) கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல: I | 3,000/- | 200/- | 150/- |
| 5) கொடிகாமம் சந்தை இல: II | 3,000/- | 200/- | 150/- |
| 6) மிருசுவில் பொதுச் சந்தை | 2,000/- | 150/- | 100/- |
| 7) எழுமட்டுவாள் பொதுச்சந்தை | 1,500/- | 100/- | 100/- |
| 8) மிருசுவில் மாட்டிறைச்சிக் கடை | 25,000/- | 200/- | 200/- |
| ★ 9) வரணி மாட்டிறைச்சிக்கடை | 30,000/- | 200/- | 200/- |
| 10) வரணி பொதுச்சந்தை | 60,000/- | 250/- | 200/- |
| ★ 11) வரணி ஆட்டிறைச்சிக் கடை | 5,000/- | 200/- | 200/- |
| ★ 12) கைதடி நுணாவில் மாட்டிறைச்சிக்கடை | 36,000/- | 250/- | 200/- |
| 13) கைதடி பொதுச்சந்தை | 15,000/- | 200/- | 200/- |
| 14) கைதடி ஆட்டிறைச்சிக்கடை | 55,000/- | 250/- | 200/- |
| 15) கைதடி மாட்டிறைச்சிக்கடை | 75,000/- | 250/- | 200/- |
| ★ 16) நாவற்குழி மாட்டிறைச்சிக்கடை | 40,000/- | 250/- | 200/- |
| ★ 17) நாவற்குழி ஆட்டிறைச்சிக்கடை | 15,000/- | 250/- | 200/- |

★ கேள்விக்காரர் தமது சொந்தச் செலவில் தற்காலிக கடை அமைத்தல் வேண்டும்.

பு. சுந்தரம்பிள்ளை
விசேட ஆணையாளர்

சாவகச்சேரி பிரதேசசபை,
கமநல சேவை நிலையக்கட்டடம்,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
15-10-1996

(சி/3310)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் பிரச்சினை:
# இந்திய தலையீடு தேவை

இலங்கையில் நடைபெறும் போரில் எத்தரப்பும் திட்டவட்டமான வெற்றியை எய்துவது இயலாத காரியமாகும்.

இப்போர் நீடிக்க, நீடிக்க ஈழத் தமிழர்களின் தொல்லைகளும், துன்பங்களுமே நீடிக்கும்.

பல்லாண்டுகாலமாக இலங்கையின் தேசிய வாழ்விலும், நிர்வாகத்திலும், அரசு நிறுவனங்களிலும் தமிழர்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் அளிக்க இலங்கை அரசுகள் தவறியது தான் இப்போருக்கு மூல காரணம்.

> தமிழகத்திலிருந்து வெளிவரும் ''தினமணி'' நாளேட்டில் 15 /10 /96 இல் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் சுருக்கம்.

இக் கோரிக்கைகளை ஜனநாயக ரீதியாக முன்வைத்து போராடிய மிதவாத சக்திகளை இலங்கை அரசுகள் அலட்சியப்படுத்தி ஒதுக்கியதே கடைசியில் புலிகளின் கை ஓங்குவதற்குக் காரணமாயிற்று.

ஈழத்துக்கு சுயாட்சி அதிகாரம் அளிக்கும் ஜனாதிபதி சந்திரிகாவின் திட்டத்தை பிரதான சிங்கள எதிர்க்கட்சியான ஐ. தே. க. எதிர்த்து வருகிறது.

இக்கட்சியின் ஆதரவின்றி சந்திரிகா அரசு திட்டத்தை நிறைவேற்ற முடியாது.

உண்மை என்னவெனில் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை அரசு உருவாக்கவில்லை.

இந்நிலையில் இலங்கையில் இருந்து அகதிகள் தமிழகத்துக்கு வந்து குவியும் பிரச்சினை பற்றி இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் குஜ்ராலிடம் முதல்வர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

அது மட்டுமல்ல ஈழத்தமிழர் பிரச்சினையில் அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு இந்தியா தனது செல்வாக்கைப்பிரயோகிப்பதும் அவசியம்.

முடிவில்லாத இலங்கைப் போர் இந்தியாவுக்கு ஓயாத பிரச்சினை மட்டும் என்பதல்ல. இலங்கையில் தமிழினத்தை அழித்து விடக்கூடிய ஆபத்தில் அது முடியக் கூடாது என்பதே ஆகும்.

★கௌரவ பட்டமளிப்பு★

இணுவில் சிவகாமி அம்பாள் தேவஸ்தானத்தில் சென்ற 5 வருட காலமாக நவராத்திரி தினங்களில் இன்னிசைக் கச்சேரி நடாத்தி வந்த சங்கீத வித்வான்.

பிரம்ம ஸ்ரீ

**கல்யாண சுந்தர இராமநாத சர்மா**

(வயலின் வித்வான் பிரம்மஸ்ரீ எஸ். சர்வேஸ்வர சர்மாவின் சிஷ்யன்)

அவர்கட்கு (விஜயதசமி) இன்று காலை 8 மணிக்கு ஷ்டி ஆலய அடியார்களாலும், சிவாசார்யர்களாலும் சங்கீத வித்வான்களாலும்

''சங்கீத வித்யா சாகரம்''

என்னும் சிறப்புப்பட்டம் வழங்கப்படும்.

இங்ஙனம்
அமைப்புக்குழு.

(43258)

## ஒரு திங்கள் நினைவில் ஆத்ம சாந்திக்கு ....

ஆசிரியர் ச. அருள்நங்கை அவர்களின் அன்புத் தந்தை.

**தம்பாபிள்ளை இராசரட்ணம்**

''புதிய உயர்கல்லூரி'' பேர் நிறுவனத்தை
யாழ்ப்பாணத்தில் மிகவினிதாய் நிர்வகித்து
மாணவரோங்க இந்து நாகரிக சமய கல்விதனை
அள்ளித்தரும் அட்சய பாத்திரமாம்
அருள் நங்கைதனை பெற்றெடுத்த தந்தையரே
ஆணைக்கோட்டையூர் அமர சோதி
சிவனருளால் ஊறுக சாந்தி !
தன்னரிய தந்தை பிரிவு தாங்காத குடும்பத்துக்கு
ஆறுதல் நவில்கிறோம்.

1997 உயர்தர மாணவர்கள்
புதிய உயர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(43248)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் நாகமணி கோபாலபிள்ளை**

தோற்றம்; 14 — 12 — 1914
மறைவு: 21 — 09 — 1996

21 - 09 - 1996 அன்று இறைவனடி எய்திய அமரர் நாகமணி கோபாலபிள்ளை அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று 21-10-96 திங்கட்கிழமை மு. ப. 10-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும்; இந்நிகழ்வில் பங்குபற்றுவதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்;
மனைவி, மக்கள்,
மருமககள், பேரப்பிள்ளைகள்.

வனாக வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

(43265)

## மாணவருக்கு உதவி

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் செயற்திட்டங்களில் ஒன்றான ''வசதி குறைந்த மாணவர்கள் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின்'' கீழ், வலிகாமம் பகுதியிலிருந்து பத்து உயர் கல்வி பயிலும் மாணவிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம், ஆறுமுகா வித்தியாலயம், சைவ தமிழ்க் கலவன் பாடசாலை, அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவிகளாவர். இவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மகளிர் அபிவிருத்தி நிலையம், பண உதவி செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ஆங்கில தின போட்டிகள்

யாழ். நல்லூர் கல்விக் கோட்டங்களில் ஆங்கில தினப் போட்டிகள் பின்வரும் ஒழுங்குகளில் நடைபெறும் என கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு வ. தாணையா தெரிவித்தார்.

★ யாழ். கோட்டம்:- நாளை யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில்.

★ நல்லூர் கோட்டம்:- எதிர்வரும் வியாழன், வெள்ளிக் கிழமைகளில் யாழ். இந்துக் கல்லூரியில். (உ)

## உதிரிப் பாகங்களை கடத்த முயன்ற பெண் கைது

### தாண்டிக்குளத்தில் வைத்து

தடை செய்யப்பட்ட பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு கடத்திச் செல்ல முற்பட்ட தமிழ்ப் பெண் ஒருவர் தாண்டிக் குளத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து பெருமளவு உழவு இயந்திர உதிரிப்பாகங்களை வவுனியா பொலீஸார் கைப்பற்றினர்.

அவசர காலப் பிரமாணங்களின் கீழ் இப்பொருள்களை வடக்கே எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

14 கஜான் பின்கள், 40போல் பெயரிங், 15 காஸ்கட் செற்கள் ஆகியன இந்த உதிரிப் பாகங்களில் அடங்கியுள்ளன.

சுமார் 50வயதுடைய சுராஜினின் கமலாதேவி என்ற பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதே வேளை — மற்றொரு விடுதலைப் புலிச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

18 வயதுடைய சின்னவன் என அழைக்கப்படும் கிருஷ்ணபிள்ளை மகேந்திரராஜா என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையைச் சேர்ந்த இவர் 2வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளதாம். (உ-8)

## நினைவகலா நெஞ்சங்கள்

**செல்வி ஞானந்தி கணநாதன்**

(சுண்டிக்குளிமகளிர் கல்லூரி 1996 ஆம் ஆண்டு விஞ்ஞான பிரிவுப் மாணவி)

உதயம்: 09 — 08 — 1977
அஸ்தமனம்: 07 — 09 — 1996

ஆருயிர் நண்பியே!
கன்னங்குழியச் சிரித்துவிட்டு காய்ந்துதிர்ந்த பூவாகி
பத்தொன்பது வயதினிலே பார்விட்டு சென்றுவிட்ட
உன் இனிய முகம் பார்த்து ஓராறு கணங்கள் சென்றாலும்
உன் நினைவு எம் சிந்தையில் நிற்குதம்மா.

1996ஆம் ஆண்டு
விஞ்ஞானப் பிரிவு நண்பிகள்,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

(43276)

## உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் - யாழ்ப்பாணம்

உயர் தேசிய கணக்கியல் டிப்புளோமா
மாலை நேரம். (4 வருடம்)

தகைமை:-
க. பொ. த. (உ/த) 4 பாடங்கள்
அ. சித்தி
ஆ. கணக்கியல் வேலை அனுபவம்.

விண்ணப்பப் படிவங்களுக்கும், விவரங்களுக்கும்
ஒருங்கிணைப்பாளர்,
உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
விண்ணப்ப முடிவுத் திகதி:- 30 - 10 - 1996

வீ. எஸ். கீதபொன்கலன்
ஒருங்கிணைப்பாளர்,
உயர் தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்.

(C/3305)

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 11 — 01 — 1911



மறைவு: 21 — 10 — 1988

**அமரர் வீ. அப்பாத்துரை**

(தபாற் கட்டைச் சந்தி — அரியாலை)

''இறைவன் அருளில் அமர்ந்தீர் போற்றி''

உமது நினைவில் இருக்கும்:
மனைவி, மகன், மகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

அ. உபயசேகரம்,
486 (188), கண்டி வீதி,
அரியாலை.

(43235)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த ஆசிரியர் 2,300 பேர் இன்னும் குடாநாடு திரும்பவில்லை

## அவர்களின் இடத்துக்கு புதியவர்களை நியமிக்க முடிவு?

கொழும்பு, ஒக். 21

யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து மீண்டும் திரும்பி வந்து தமது பழைய பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்காது இன்னும் 2 ஆயிரத்து 300 ஆசிரியர்கள் இருந்துவருகின்றனர். அவர்கள் திரும்பிவராததால் கடமையில் இருந்து விலகிக் கொண்டவர்களாகக் கணிக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

அரசாங்க உயர்மட்டம் மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்களை ஆதாரம் காட்டிக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடமாகாண புனரமைப்பு தொடர்பான மாநாட்டில் யாழ். பாடசாலைகள் பற்றி ஆராயப்பட்ட பின்னரே மேற்கண்ட பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே வேளை — யாழ் திரும்ப விருப்பம் தெரிவித்திருக்கும் ஆசிரியர்கள் பலர் கப்பலில் பயணம் செய்ய இடம் கிடைக்காமல் திருகோணமலையில் திண்டாடுகிறார்கள் என வடக்கு — கிழக்கு மாகாண சபை நிர்வாகத்துக்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த ஆசிரியர்களில் 2 ஆயிரம் பேர் திருமலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்தும் கடமை புரிந்து வருகின்றார்கள்.

யாழ் நகரில் உள்ள 486 பாடசாலைகளில் 424 பாடசாலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன

அவற்றினில் 382 பாடசாலைகள் பழைய பாடசாலைக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன.

42 பாடசாலைகள் தற்காலிக கட்டடங்களில் இயங்குகின்றன. 62 பாடசாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன.

சூரியப் பிரகாசம் நடவடிக்கைக்கு முன் சுமார் 2 லட்சம் மாணவர்கள் கல்வி பயின்றனர். அவர்களில் சுமார் 98 ஆயிரம் மாணவர்கள் மட்டுமே பாடசாலைகளுக்குத் தற்போது சமுகமளித்துள்ளார்கள்.

சுமார் ஒருலட்சம் மாணவர்கள் குடா நாட்டைவிட்டு இடம் பெயர்ந்திருக்கிறார்கள்.

6 ஆயிரத்து 578 ஆசிரியர்களில் தற்போது 4 ஆயிரத்து 278 ஆசிரியர்களே தமக்குரிய பாடசலைகளுக்கு சமுகமளித்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### பாதுகாப்பு ஏற்பாடு

வடமத்திய மாகாண எல்லையில் உள்ள கிராமங்கள் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காவதை தடுப்பதற்காக வவுனியாவிலிருந்து பதவியாவரை பாதுகாப்பு 3 காப்பகழிகளை நிர்மாணிக்கும் பணி இராணுவத்தினராலும் பொலீஸாரினாலும் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது என கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

(உ-10)

### பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை கல்லூரியில் நடைபெறும். சங்கானைக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-90)

### தொழில் நுட்ப பரீட்சை

உயர் தேசிய வணிக டிப்புளோமா (புதிய பாடத்திட்டம்) ஓஆம் வருட டி/782 இறுதிப் பரீட்சை இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

பரீட்சை அனுமதி அட்டைகள் இன்று காலை 7.30 மணி தொடக்கம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வைத்து யாழ். தொழில்நுட்பக் கல்லூரி வணிகப் பகுதித் தலைவரால் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-2)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 12 — 1939

மறைவு: 14 — 10 — 1994

திருமதி **பாலசிங்கம் சிவனேஸ்வரி**

திதி: 21-10-1996

வாணியின் நாளில், வருகின்ற அன்னையே! உங்கள் வசந்த நினைவுகளை, அரும்புகள் நுகர்கின்றோம் கானமாய், தென்றலாய், கலங்கா நிலவாய் — நீங்கள் வாழ்ந்த நாள்களை, வணங்கியே சுமக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(43221)

---

## ஆறாம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



இறப்பு: 28 — 04 — 1996

அமரர்

**வேலுப்பிள்ளை கணையசிங்கம்**

(சாந்தன்)

எங்கள் அன்புத் தெய்வமே! அணையா தீபமே!
எண்ணும் போது உள்ளம் நெருப்பாய் எரிகிறது
வண்ணமார்பில் குண்டேந்தி
ஒரு கணத்தில் விண்ணுக்கு சென்றீர்
பிள்ளைகள் தேடுதையா
கண்ணீர் உதிருதையா
கண்கள் களையிழந்து விட்டதையா
மண்ணில் நாம் உள்ளவரை
மாறாது உம் நினைவு.

நாளை செவ்வாய்க்கிழமை 22 - 10 - 96 இல் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள் எமது இல்லத்தில் நடைபெறும். உறவினர்களையும், நண்பர்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் வாடும்:
இன்னுயிர் மனைவி யோகா,
இனிய செல்வங்கள், அன்பு மாமா,
அருமை மச்சாள்மார், உற்றார்,
உறவினர், நண்பர்கள்,
பிரான்சில் உள்ள மச்சாள்,
மச்சான் குடும்பத்தினர்.

68/7, மில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(8089)

---

## அந்தியேட்டி அழைப்பு



**வேலுப்பிள்ளை அருணாசலம்**

விடத்தற்பளை, மிருசுவிலைச் சேர்ந்த
அமரர் வேலுப்பிள்ளை அருணாசலம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை அவரின் இல்லத்தில் **21 - 10 - 96** (திங்கள்) இன்று நடைபெறும்.

அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் நண்பர்கள், உறவினர்களை கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ. குணரத்தினம்
(மகன்)

(சி-3314)

---

## 9 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21, 22 ஆம் திகதிகளில் இந்திய இராணுவநடவடிக்கையால் யாழ் பொது வைத்தியசாலையில் கடமையின் போது உயிர்நீத்த கீழ்வரும் உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களுக்கு

### எமது கண்ணீர் அஞ்சலிகள்

1) வைத்திய நிபுணர் எஸ். சிவபாதசுந்தரம்
2) வைத்திய கலாநிதி கே. பரிமேலழகர்
3) வைத்திய கலாநிதி கே. கணேசரத்தினம்
4) திருமதி பா. வடிவேலு
5) செல்வி லீலாவதி முத்தையா
6) செல்வி மங்கையர்க்கரசி இராமநாதன்
7) திரு. கே. செல்வராசா
8) திரு. கே. இருஷ்ணராசா
9) திரு. மு. துரைராஜா
10) திரு. மி. சண்முகலிங்கம்
11) திரு. வி. வரதராசன்
12) திரு. கே. வேதாரண்யம்
13) திரு. ஜோன் பீற்றர்
14) திரு. இ. சுகுமார்
15) திரு. க. சிவலோகநாதன்
16) திரு. எஸ். ஜெகநாதன்
17) திரு. கே. சிவராசா
18) திரு. கோ. உருத்திரன்
19) திரு. க. மார்க்கண்டு
20) திரு. இ. இரத்தினராசா
21) திரு. க. நவரத்தினம்

பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி-3308)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ஆவது நினைவு நாள்
### 21·10·1996



செல்வி
**ஞானந்தி கணநாதன்**
(சுண்டிக்குளி A/L 96 மாணவி)

கொடுத்தது: **09 – 08 – 1977**
எடுத்தது: **07 – 09 – 1996**

" மூன்றும், ஒன்றும் ... ... ... ... ... !
மூன்றில் ஒன்று ... ... ... ... ... ?"

ஆத்ம(ா) சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்ற அனைத்து அன்புள்ளங்களையும் உளமார நேசிக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

348, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (சி- 3238)

## ஈராண்டு நிறைவு
## நினைவஞ்சலி



கணபதியின் தாள் சேர்ந்த கணேசன்
அமரர்
அளவையூர் சைவப்புலவர், வித்துவான், பண்டிதர்
**சி. நா. கணேசன்** B. O. L.
(சித்தவைத்திய கலாநிதி)

ஐங்கரனின் அடித்தலத்தே அமர்ந்த ஐயா!
அறிவுடனே அருள் நிறைந்த எங்கள் மெய்யா!
சங்கை பெறும் எழில் மிகுந்த உருவும் என்றும்
சஞ்சலமே யறியாத மலர்வும் கொண்டே
எங்களிடை வாழ்ந்தெம்மை வாழ வைத்தாய்
எல்லார்க்கும் இனியனாய்த் திகழ்ந்தாய் உன்றன்
துங்க நிறை உளப்பாங்கை உன்னி உன்னித்
துதிக்கின்றோம் உன்நாமம் என்றும் வாழ்க!

பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

56, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (43247)

முல்லைக்'..
(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'கரும்புலி தினமாக' விடுதலைப் புலிகள் அனுஷ்டித்து வருகின்றனர்.

அது தவிர,

தமிழர் விடுதலைப் போராட்டத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்த கறுப்பு ஜூலை வன்முறைகள், தீவின் தென்பகுதியில் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டதும் இந்த ஜூலை மாதத்தில்தான்.

1983 ஜூலையில் திருநெல்வேலியில் இடம்பெற்றகண்ணி வெடித் தாக்குதலில் 13 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதை அடுத்து ஜூலை 23 ஆம் திகதி முதல் நாடுமுழுவதிலும் தமிழர்களுக்கு எதிரான இன வன்முறைபற்றிப்பரவியதையும் —

அதனால் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்துக்கு சர்வதேச ரீதியில் ஆதரவு பெருக அந்த வன்முறைகள் உதவியதையும்—

அனைவரும் அறிவர்.

உரிமை கேட்ட தமிழர்களுக்கு வன்முறை மூலம் அளிக்கப்பட்ட பதிலை தமிழர்களுக்கு செய்யப்பட்ட ஓர் இழுக்காகவே கருதிய புலிகள் வருடம் தோறும் ஜூலை மாதத்தில் பெரும் தாக்குதல் சிலவற்றை நடத்தத் தவறுவதில்லை.

அவற்றில் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

*புலிகளின் தாக்குதல்*

1989 ஜூலை 13ஆம் திகதி கொழும்பில் அரச பாதுகாப்புடன் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வெ. யோகேஸ்வரன் போன்றோர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பன்னிரண்டு நாள்கள் கழித்து 'புளொட்' அமைப்பின் தலைவர் உமாமகேஸ்வரன் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1993 ஜூலையில் வெலிஓயா (மணலாறு) பாதுகாப்பு அரண் தொடரில் ஜானகபுர முகாம் தாக்கப்பட்டது.

1995 ஜூலை 9 இல் வலிகாமத்தில் அரசுப்படைகள் 'முன்னேறிப்பாய்தல்' நடவடிக்கையை ஆரம்பித்ததும் பதிலடியாக ஜூலை 14 ஆம் திகதி 'புலிப்பாய்ச்சல்' தாக்குதலை புலிகள் நடத்திக்காட்டினர்.

அடுத்த சில தினங்களில் காங்கேசன்துறை முகாமுக்குச் சற்று வெளியே வைத்து கடற்படைக் கட்டளைக் கப்பலான 'எடித்தாரா' மீது கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்த வருடம் ஜூலை 28 ஆம் திகதி மணலாறில் அரச படைகள் மீது புலிகள் நடத்திய பெரும் தாக்குதல் நடவடிக்கை புலிகளுக்குத் தோல்வியில் முடிவடைந்தது.

இந்த வருடமும் கரும்புலித் தினத்துக்குக் கட்டியம் கூறுவது போல அதற்கு முதல் நாள், படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்த யாழ். நகரில், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை இலக்கு வைத்து கரும்புலித் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது தெரிந்ததே.

அதைத் தொடர்ந்து முல்லைத் தீவுப் பெரும் தாக்குதல் இடம்பெற்றது.

ஆறு நாள்கழித்துக்கொழும்பில் தெகிவளையில் ஓடும் ரயிலில் வெடித்த குண்டினால் எழுபது பேர் வரை உயிரிழந்தனர்; பல நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர்; அங்கவீனமடைந்தனர்.

இந்த ஜூலை மாதப் பின்னணியில் தான் முல்லை முகாம் மீதான வெற்றிகரத் தாக்குதலை புலிகள் ஒப்பேற்றியிருக்கின்றார்கள்:

அதனை ஒப்பேற்றுவதற்கு அவர்கள் செய்த முன்னேற்பாடுகள், வகுத்த வியூகங்கள் மற்றும் தாக்குதலின் விவரங்களை அடுத்து வரும் அத்தியாயங்களில் பார்ப்போம்..

(மிகுதி நாளை)

## 31-ம் நாள் நினைவஞ்சலி
### (21–10–1996)



அமரர் வ. நடராசா அவர்களின்
அன்புமனைவி
**திருமதி செல்லம்மா**

மலர்வு: **18–06–1924**
உதிர்வு: **21–09–1996**

அம்மா, எம்மை வளர்த்து ஆளாக்கி
வாழ்க்கையில் வழிகாட்டியாகத் திகழ்ந்த
எங்கள் அன்பின் திருவுருவே, பண்பின் சிகரமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் அம்மா,
உங்கள் நினைவு மட்டும் என்றும் எங்கள்
மனதை விட்டு நீங்காது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சும்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

39, கொண்டலடி ஒழுங்கை,
நல்லூர். (43256)

## நன்றி நவிலலும்
## அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**தம்பாபிள்ளை இராசரத்தினம்**

எம்முடன்: **19-03–1919**
இறைவனுடன்: **22–09–1996**

கடந்த 22- 09- 96இல் எம்மைப் பிரிந்து இறையடிசேர்ந்த எம் அன்புத் தெய்வத்தின் மறைவிற்கு நேரில்வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், பத்திரிகை மூலமும், கடித மூலமும் தம் அனுதாபங்களை அறிவித்தவர்களுக்கும், பல வழிகளிலும் பங்கு கொண்டு உதவியளித்தவர்களுக்கும் எமது நன்றியை மன நிறைவுடன் அறிவிக்கின்றோம்.

நாளை (22- 10- 96) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

குளப்பிட்டி றோட், ஆலடி,
ஆனைக்கோட்டை. (43261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நீற்றுப் பூசனிக்காய் மொத்தமாக விற்பனைக்குண்டு. மொத்தமாக வாங்குபவர்களுக்கு விசேட கழிவு உண்டு. நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும். அ. குமாரசுவாமி, இல 88, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். (43254)

பந்தல் இரும்புக் கதிரைகள், இரும்புக் கிறில், எஸ்லோன் பிற்றிங்ஸ், வெள்ளிச் சாமான்கள், கிளாஸ், பீங்கான் சாமான்கள் என்பன விற்பனைக்கு உண்டு. இல: 49, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம். (43268)

### தவறிவிட்டது

கணேசலிங்கம் கோபிதன் ஆகிய எனது 733370289 V இலக்க அடையாள அட்டை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து இல. 302/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (43272)

### அக்கரைச் சீமையில்

25 ரூபாவுடன் ஒருமுறை இங்கிலாந்து போய் வர 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் அக்கரைச் சீமையில் நாவலை வாசியுங்கள். பூபாலசிங்கம், மக்மிலன் புத்தகசாலைகள். (43250)

### திருமண சேவை

விவாகப் பொருத்தத்துக்கான குறிப்புகள், தகவல்கள் வழங்கும் சேவைகள் (மணமக்கள் பதிவுகள், தேர்வுகள்) நேரிலேயே. 03, யாழ் வீதி, யாழ்ப்பாணம். (பலாலி, பருத்தித்துறை, சிறாம்பியடி வீதிகளின் சந்திப்புக்கருகில்). (43269)

### திருமண சேவை

விவாகப் பொருத்தம் நிச்சயித்துக் கொடுக்கப்படும். குறிப்பு பார்த்து குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும். ஆண், பெண் ஜாதகங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். க. திருஞானசம்பந்தர், சோதிடர் இராமகிருஷ்ண வீதி, கோண்டாவில். (43244)

### இசை வகுப்புகள்

ஓர்கன் (Organ), கிற்றார் (Guitar), புல்லாங்குழல் (Flute) வகுப்புகள் 21 - 10 - 96 அன்று (விஜய தசமி) காலை 8.00 மணிக்கு ஆரம்பம். முகவரி: புவனகிரி, அரசடி பிள்ளையார் கோயிலடி, ஸ்ரேசன் வீதி, கோண்டாவில். (42942)

### புத்தகப்பிரியர்களே

தென்மராட்சியில் பல அரிய நூல்களை இரவல் பெற்று வாசிக்க நாடுங்கள் லிங் லெண்டிங் லைப்ரரி, Ling Lending Library இல: 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (43804)

### யாருடையது?

இல, 591041371 V [வல்லிபுரம் சுந்தரலிங்கம்], இல. 711243100 V [கந்தையா மேகநாதன்]. தவறவிட்ட மேற்படி தேசிய அடையாள அட்டைகளுக்கு உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளவும். உரிமையாளர், சிவன் ஸ்ரோர்ஸ், வளாகச் சந்தி, திருநெல்வேலி. (43255)

### காணி விற்பனைக்கு

சங்கானை பிளாக் றோட் கடமைக் காணி வைரவர் கோவிலடி 11 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சு. சிவகுரு, இல. 561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (43271)

## A/L DAYCLASS

கலை, வர்த்தக பிரிவுகள்
(வழமையான ஆசிரியர்கள்)

★ SPOKEN ENGLISH
★ புலமைப் பரிசில் '97
★ O/L & YR. 10 மீட்டல்

மேற்படி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.
SHAMROCK
யா/ ஈச்சமோட்டை.
(மறவகுளத்திற்கு அருகில்)
(43264)

## யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
## கரவெட்டி

1996 நவம்பர் 21ம் நாள் ஆறாம் ஆண்டிலே காலடி எடுத்து வைக்கும் எங்கள் கல்லூரி,

வாழிய வாழிய வாழியவே!
வளமெலாம் பெற்று வாழியவே!
உளம் நிறைந்துயர் வாழியவே!
களம் பலவென்று வாழியவே!

இவ்வண்ணம்,
அதிபர், ஆசிரியர், மாணவர்,
அபிவிருத்திச்சபையினர், நலன் விரும்பிகள்.

சி(-3317)

## MODERN EDUCATION CENTRE
KARAVEDDY

## G.A.Q வகுப்புகள்

பிரபல ஆசிரியர்களுடன் ஆரம்பமாகின்றன
அனுமதிகளை 21 - 10 - 1996 இற்கிடையில் பெற்றுக்கொள்ளவும்.
அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

—★— —★— —★—

நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன

## 97 பகல்நேர வகுப்புகள்

இரசாயனவியல்: திரு. வசீகரன்
வெள்ளிக்கிழமை காலை 6-45 மணி.

தூய பிரயோக ]-கணிதம்: திரு. வெக்ரர் வேலாயுதம்
வெள்ளிக்கிழமை காலை 8-00 மணி.

பௌதிகவியல்: திரு. சூரியநாதன்
– நிர்வாகி

(சி/3301)

## 31- ம் நாள் நினைவஞ்சலி



மண்ணகம்: 15 — 10 — 1938

விண்ணகம்: 21 — 09 — 1996

### பழனி மகேந்திரன்

பந்தமொடு பாசமே உருவாயான
எங்கள் அன்புத் தெய்வமே!
காலங்கள் சென்றிடினும்
மாறாது உங்கள் பாசம்,
என்றும் ஆறாது எம் நெஞ்சங்கள்.

உம் நினைவில் வாழும்:

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், உறவினர்.

இருபாலை றோட்,
கோண்டாவில் கிழக்கு.

(43266)




அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாது வருடம், ஐப்பசித்திங்கள் 8 ஆம் நாள் (24 - 10 - 96) வியாழக்கிழமை முற்பகல் 9 - 51 மணி முதல் 11-49 மணி வரை உள்ள பூர்வபட்ச திரயோதசித் திதியும், உத்தரட்டாதி நட்சத்திரமும் கூடிய தனுலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

| எனது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>ஜெயதாசன்<br>(ஜெயா)<br>அவர்களுக்கும் | எனது புத்திரி<br>திருநிறை செல்வி<br>ராஜினி<br>அவர்களுக்கும் |
|---|---|

மருதடி விநாயகர் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு

அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு உபசாரம்:
மணமகன் இல்லத்தில் 25 - 10 - 96 வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணி.
மணமகள் இல்லத்தில் 26 - 10 - 96 சனிக்கிழமை மாலை 4-00 மணி.

தங்கள் நல்வரவை விரும்பும், நாடும்:

திருமதி ம. செல்லத்துரை
இணுவில் வீதி,
மானிப்பாய்.

திருமதி செ. ரங்கநாதன்
சண்டிலிப்பாய் தெற்கு,
சண்டிலிப்பாய்.



(43198)

## நிலையான
## நினைவில் ஈராண்டு



### திரு. தம்பிராசா புவனேஸ்வரன்
(புவா)

திதி: 21 — 10 — 96

அன்னை மடியில்: 27 - 11 - 1948
ஆண்டவன் நிழலில்: 12 - 11 - 1994

அன்பினால் அரவணைத்து ஆற்றலால் வழி நடத்தி
பண்பினால் பலரும்போற்ற பாரிலே எம்மையெல்லாம்
கண்ணினைப் போல எண்ணிக் காத்த எம்பிதாவே, நாம்
எண்ணினால் உம் பிரிவை ஏங்குதே எங்கள் நெஞ்சம்
மண்ணிலே நீங்கள் செய்த மாண்புறு வழி பாடெல்லாம்
விண்ணிலே ஆற்ற எண்ணி விரைந்ததோ உங்கள் ஆத்மா.
அஞ்சலித்து ஆராதனைகள் பல செய்திடுவோம்.
ஆண்டவனை வேண்டுகிறோம் உங்களாத்மா சாந்தியடைக!

உங்கள் பிரிவால் என்றும் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.

(8921)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வித்தியாரம்ப நன்னாளில்

இன்று விஜயதசமி நன்னாள். சிறுவர்களுக்கு ஏடு தொடக்கி வித்தியாரம்பம் செய்வதற்குச் சிறப்பான நாள்.

இன்றைய பாலகர்கள் தான் நாளைய நாட்டின் பரிபாலகர்கள். அவர்கள் நற்பிரசைகளாக வளர்ந்தால் மட்டுமே நாடு நனிசிறந்த நாடாக உருவெடுக்கும்.

குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள் என்ற மனித வளர்ச்சிப் பருவங்களில் தான் ஒரு மனிதனின் எதிர்கால வாழ்வு திர்ணயிக்கப்படுகிறது: தனி மனிதன் ஒருவன் அந்தப் பருவகாலங்களிலேயே உருவாகிறான்.

கடந்த மூன்று அல்லது நான்கு தசாப்தங்களில் புதிய வாழ்வியல் என்ற பெயரில் தமிழ் மக்களின் — குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களின்— வாழ்வியல் விழுமியங்கள், பண்பாடுகள், நன்னெறிகள், சமூகத் தர்மங்கள் என்பன நலிந்து போய்விட்டன.

இந்தப் போக்குத் தொடருமானால் எங்களது சமூகப் பண்பும், இனச் சிறப்பும் என்னாகப் போகின்றன?

எங்கள் ஒழுக்க முறைகளும், பழக்க வழக்கங்களும் வெட்கித் தலை குனியுமளவுக்கு சீர்கெட்டுப் போய்விட்டன. எமக்குள்ளேயே பெருமைப்பட்டுக் கொள்ளும் அளவுக்கு நாங்கள் படித்த சமூகத்தினர் தானா?

எங்கு சென்றாலும், என்ன அலுவலுக்குப் போனாலும் தத்தமது காரியங்களை முதலில் செய்து முடித்து விட வேண்டும் என்று முண்டியடித்துக் கொள்பவர்கள் நாங்கள். அடுத்தவனுக்கும், வசதி இல்லாதவனுக்கும் உதவ வேண்டும் என்ற மனப்பக்குவம் எம்மிடம் பூஜ்யம். மற்றவருக்கு கெடுதல் செய்ய நினைக்கிறோமே அன்றி நன்மை செய்ய விழைகின்றோம் இல்லை. செய்நன்றி கொன்று கொள்வது எம்மவரின் பெருவழக்கில்' ஒன்றாகிவிட்டது. பணத்துக்காக எந்தப் பாவத்தையும் செய்வோர் எம்மில் பெருவீதத்தினர், வாழ்க்கையை போலித்தனமாக்கி அதனை மறைக்கவும் முயல்கிறோம். பொது இடத்தில் கூடி வாழ்ந்து கொள்ள முடியாத கூட்டத்தினர் நாம்.

பாடசாலையில் பயின்ற கல்வியை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவோர் நம்மில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

எங்களை நல்லவர்களாக, வல்லவர்களாக ஆக்குவதற்காக ஆன்று அவிந்த அறிவுடைப் பெருமக்கள் சொல்லித் தந்த — பெரும் பொக்கிஷங்களாக வைத்துச் சென்ற — நன்னெறிகளை மறந்துவிட்டோம்.

அதனால் அத்தகைய நெறிகள் எங்கள் சொத்துக்களாக உள்ளனவா என்று எமது பிள்ளைகள் கேட்குமளவுக்கு நாம் கல்விவேறு;வாழ்க்கை வேறு; சமயம் வேறு; என்று வாழ்கிறோம். அதனால் இளையவர்களும்எமது வாழ்வியல் இது தான் என்றுஎண்ணுகிறார்கள்

அதனால் தான் அவர்களிடம் பெரியோருக்கு மதிப்பளித்தல், பிறருக்கு உதவுதல் நலிந்தவர் மீது அன்பு செலுத்துதல் ஆகிய நற்பண்புகளையும், நன்னெறி ஒட்டிய பழக்க வழக்கங்களையும் காண முடியவில்லை.

இந்த நிலை எதிர்காலத்திலாவது நீங்கி, தமிழரின் சமூக மகத்துவம் சிறக்க வேண்டுமானால் வாழ்க்கைக்குக் கல்வி என்ற நிலை புதுப்பிக்கப்பட வேண்டும்.

வித்தியாரம்பம் செய்யும் இந்நாளில் இது குறித்துச் சிறிது சிந்தியுங்களேன்.

# யாழ். தளபதி ஜானக லண்டன் செல்வார்

கொழும்பு,ஒக், 21

யாழ். இராணுவத் தளபதி மேயர் ஜெனரல் ஜானக பெரேரா, அடுத்த ஆண்டில் லண்டன் பாதுகாப்புத்துறைக் கல்விக்கான றோயல் கல்லூரியில் பயிற்சி நெறி ஒன்றைப் பின்பற்றுவதற்காக அங்கு செல்லவிருக்கின்றார்.

மிகவிரைவில் நான்கு நட்சத்திர ஜெனரல்கள் இருவர் ஒய்வு பெற்றுச் செல்ல இருப்பதாலும், மூத்த படை அதிகாரிகள் இருவர் பயிற்சி நெறிகளுக்காக வெளிநாடு செல்லவிருப்பதாலும் இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் வேலைப்பளு அதிகரித்து நெருக்கடி ஏற்படும் என கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

அதிகாரிகள் பற்றாக்குறையினால் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தலுவத்த மிகக் கஷ்டமான காலத்தை எதிர்நோக்க வேண்டிவரும் என்றும் கூறப்படுகின்றது.

இராணுவத்தின் துணைத் தளபதி மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்க ஒய்வு பெற்றுச் சென்றுவிட்டார். ஒய்வூதியத்துடனும், மேலதிக வேதனத்துடனும் புதிய பதவி ஒன்றை அவருக்கு வழங்கப் படைத்துறை விரும்பிய போதிலும் அவர் அதனை ஏற்க மறுத்து விட்டார்.

இராணுவத்தின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ. செனிவிரத்தின இவ்வருட இறுதியில் ஒய்வு பெறுகின்றார்.

பிரிகேடியர் தெவிந்தகலுபஹன, மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்ட போதும் ஒய்வு பெறவேண்டிய காலத்துக்கு முன்னரே கடந்த ஜுலையில் ஒய்வு பெற்றுச் சென்றுவிட்டார்.

லண்டனில் அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறவிருக்கும் பாதுகாப்புத் துறைக் கல்விக்கான றோயல் கல்லூரியில் நடைபெறவிருக்கும் பயிற்சிநெறிக்கு மூத்த இராஜதந்திரி இருவரை அனுப்புவதற்கு முதலில் தீர்மானிக்கப்பட்டது ஆனால் இராணுவ உயரதிகாரி இல்லாமல் வேறு நபரை அனுப்பினால் அதற்கான செலவுகளை அந்த அதிகாரியே செலுத்த வேண்டியிருக்கும் எனக் கூறப்பட்டதால் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை அப்பயிற்சி நெறிக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் இந்திய தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் நடைபெறும் பயிற்சி நெறியில் இலங்கைப் பிரதிநிதியாக மேஜர் ஜெனரல் நீல் டயஸ் பங்குபற்றுகின்றார்.

ஏற்கனவே அரச படைகளில் இரண்டு மூத்த அதிகாரிகள் உயர் பயிற்சி நெறிக்காக வெளிநாடு சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா விமானப் படையைச் சேர்ந்த எயர் கொமடோர் ஜெயலத் வீரக்கொடி, இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல ஆகியோரே அந்த இருவருமாவர். (உ)

## 2020 ஆம் ஆண்டில் 100 கோடி முதியவர்கள்

நவீன மருத்துவ வசதி, முன்னேற்றம் மற்றும் பொதுவான வாழ்க்கைத்தரம் ஆகியனவற்றால் இறப்பு வீதம் உலகில் குறைந்து வருவதால் உலகில் முதியவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகி வருகிறது. 2020 ஆம் ஆண்டில் சுமார் 100 கோடி முதியவர்கள் உலகில் இருப்பபார்கள் என்று உலக சுகாதார நிறுவனத்தினர் கணிப்பீடு ஒன்று தெரிவிக்கிறது. (இ-10)

## அடுத்தவர் பொருளை அபகரிப்பது அடுக்குமா?

அத்தியடி, மருதடி கிராம சேவையாளர் பகுதிகளில் அத்துமீறிக் குடியிருப்போர் வேதனைக்குரிய சம்பவங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களின் அடாத்தான செயல்கள் அதிகரித்து வருகின்றன.

வீட்டு உரிமையாளர்கள் இடம் பெயர்ந்து வன்னியிலும், வெளிநாடுகளிலும் இருக்க அத்துமீறிக் குடியேறி வீட்டில் உள்ள பொருள்களை இடைவெளியின்றி நாளாந்தம் கடத்திச் செல்கின்றனர். தாம் இருக்கும் வீடுகளில் பொருள்கள் முடிவடைந்ததும் ஆட்கள் இல்லாத வேறு வீடுகளுக்கு செல்கின்றார்கள்!

வீட்டு உரிமையாளரின் அனுமதியோடு குறிப்பிட்ட வீட்டை பார்க்கச் சென்றால், வீட்டு உரிமையாளர் எங்களுக்கு கடிதம் எழுதியுள்ளார் என்று பொய் கூறி, வீடு பார்வையிடச் செல்பவர்களைப் பயமுறுத்தி திருப்பி அனுப்புகிறார்கள்.

### வாசகர் திருமுகம்

வீட்டு உரிமையாளருக்கோ அவரது உறவினருக்கோ எந்த வழியிலும் தொடர்பு இல்லாதவர்கள், வீட்டுக்காரர்கள் அல்லும் பகலும் உழைத்துத் தேடிய பொருள்களைத் திருட நினைத்து திட்டமிட்டுச் செயற்படுகிறார்கள். உரியவர்கள் இல்லாத வேளை பார்த்து அடுத்தவர் பொருள்களை அபகரிப்பது அடுக்குமா?

குடா நாட்டில் ஓரளவு வழமை நிலை திரும்பிய போதிலும், இவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்லாததன் நோக்கம் என்ன?

அடுத்தவர் பொருள்களை வாகனங்களிலும், துவிச்சக்கர வண்டிகளிலும் ஏற்றி அனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள்.

அத்து மீறிக் குடியிருப்போரை அகற்ற, வன்னிக்கு இடம் பெயர்ந்தோருக்குச் சொந்தமான பாவனை பொருள் கடத்தலைத் தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? வர்களைத்தண்டிக்க எவருமிலையா?

என். எஸ். கே. இலட்சுமணன் (ச.நீ)

யாழ்ப்பாணம்.

# ஆணவத்தை அறுக்கும் அருட்சக்தியின் விழா

இன்று விஜயதசமி. செம்பிற்களிம்புபோல, நெல்லில் உமிபோல, கிணற்றயில்டி பாசிபோல ஆன்மாவைப் பீடித்துள்ள ஆவணத்தின் முனைப்பு, வலிமை நீங்க, நீங்கி அருள்பெற யாமெல்லாம் அன்னையின் அருள் தத்துவம். எண்ணில்லாதன உயிர்கள் அவை பதி, பாசம் போல் அநாதியானவை. அந்த அநாதியான உயிர் போல் ஆணவமும் அநாதியானது. அந்த அநாதி ஆணவம் அடியோடு அழியவேண்டுமே யானால் ஆன்மாவிற்குத் திருடாசுரமர்த்தனி வடிவும் விளக்கி நிற்கின்றன.

ஆதலினால், பற்பல காரணங்களைப் பேசிப்பயன் இல்லை. ஆன்மாவின் மெய்யுணர்வை மறைக்கும் ஆணவம் கெட அருட்சக்தியை



வேண்டி நிற்கும் காலமே இது.

இதைத்தானே இன்றைய மகிடாசுரவதமும் — வாழை வெட்டும், மகாநோன்பும் (மானம்பூவும்) விளக்கி நிற்கின்றன.

மகிடாசுரன் வழியில் முன்னும், பின்னும் எத்தனை அசுரர்கள் தோன்றி ஆணவம் அழியவேண்டும் என்று உருக் காட்டினர். ப[illegible] என்னே?

யாதோவெனின் அதுதான் வருட்சக்தி பாலிக்கவேண்டும், அதற்கு ஆன்மா சக்திபின்ன மிலானின் பாதாரவிந்தங் களைப்பற்றவேண்டும்.

அவன் பாதம் பற்ற, அவன் பாதியாம் சக்தியைப்போற்றி அவள் அருள்பெற வேண்டும். அவ்வருட் சக்தியின் கடாட்சத்தாலேயே ஆன்மா ஆணவம் நீங்கி உய்தி பெறலாம். இதனையே மகிடாசுரவதமும், அவ்வதம் செய்த மகி

இன்று போல் என்றும் போற்றி உண்மை இபன்ம் எய்துவோமாக-

நவராத்திரி குறித்த சில குறிப்புகள் இவை:

★ நவராத்திரி வழிபடு காலம்:- கன்னி மாதம் எனப்படும் புரட்டாதி மாதத்தில் வருகின்ற வளர்பிறை காலத்தில் பிரதமை முதல் நவமி ஈறாக உள்ள ஒன்பது தினங்கள்.

★ ஒன்பது இரவுகள்.

★ வழிபடுதெய்வம் நாள்கள் வேண்டுபொருள் என்ற வரிசையில் —

துர்க்கை, 1—3, வீரம்.
இலக்குமி, 4—6 செல்வம்.
சரஸ்வதி, 7—9, கல்வி.

★ ஆயுத பூசை (சரஸ்வதி பூசை) — ஒன்பதாம் நாள் இரவு கொண்டாடுவது (கலைத் தெய்வமாகிய சரஸ்வதிதேவி தொழில்களுக்கெல்லாம் தெய்வமாவாள்.

★ விஜயதசமி — வெற்றிக்குரியது பத்தாம் நாள்

★ மகாநோன்பு — தோள்பின் பெருநாள்.

★ மானம்பூ — மகா நோன்பு — மருவிய வடிவம்.

★ மகிடாசுரன்— எருமைத் தலை அசுரன் (ஆணவமே வடிவு).

★ கன்னிவாழை — வள்ளி மரமாகப் பாவனை செய்தல்.

★ கன்னி வாழை வெட்டல் —மகிடாசுர வதம்.

★ நற்கருமகாலம் — விஜயத்சமி தினம்.

— சி.சந்திரமௌலீசன்

### நாளை

ஐப்பசி 6
செவ்வாய்க்கிழமை
திதி: ஏகாதசி
பின்னிரவு 2 53 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
முற்பகல் 8.23 வரை
ஏகாதசி விரதம்
ராகுகாலம்: 8.02-4 32
சுபநேரம்: 10.32-12.02
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 உல்லாசப் பயணிகள் விடுவிப்பு; பங்களா தீக்கிரை!

# யால வனப்பகுதியில் புலிகள் ஊடுருவல்?

## ஐவர் கடத்தப்பட்டனர்; 6 வாகனங்களும் கொள்ளை

கொழும்பு, ஒக். 21

யால வனவிலங்கு பாதுகாப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள பட்டனவல உல்லாசப் பயணிகள் பங்களாவை முற்றுகையிட்ட இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய ஒரு குழுவினர் அங்கிருந்த 22 உல்லாசப் பயணிளை பங்களாவை விட்டு வெளியேற்றி விட்டு அதற்கு தீ வைத்துஎரித்தனர் இரு 'டபிள்-கப்'வாகனங்கள், ஒரு ஜீப் உட்பட அங்கிருந்த ஆறு வாகனங்களை எடுத்துச் சென்றனர்.

அங்கிருந்த மூன்று வனத்துறை அதிகாரிகள், மூன்று வன வளத் திணைக்களச் சாரதிகள் ஆகியோரையும் அக் குழுவினர் கடத்திச் சென்றனர். ஆனால் அவர்களில் ஒரு சாரதி பின்னர் பாதுகாப்பாகத் தப்பி வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பங்களாவிலிருந்த உல்லாசப் பயணிகளை ஜீப்பில் ஏற்றிச் சென்ற ஆயுதக் குழுவினர் அவர்களுக்கு தீங்கு ஏதும் விளைவிக்காமல் அவர்களை ஓர் ஆற்றுக்கு அருகில் இறக்கி விட்டதாக உல்லாசப் பயணிகளில் ஒருவர் சொன்னார்.

துப்பாக்கிகளுடன் காணப்பட்ட இக் குழுவினர் இராணுவச் சீருடை அணிந்திருந்தனர் என்றும்—

அவர்கள் விடுதலைப் புலிகள் எனத் தாங்கள் கருதுவதாகவும்—

சம்பத்தப்பட்ட உல்லாசப் பயணிகள் பொலீஸாரிடம் தெரிவித்தனர் என்றும்— இலங்கை வானொலி அறிவித்தது.

இந்தக் குழுவினரைத் தேடி யால தேசிய வன விலங்கு சரணாலயப் பகுதியில் பெரும் தேடுதல் வேட்டை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-3)

# ஆந்திரா, தமிழகத்தில் கடும் மழை; பெருவெள்ளம்

ஆந்திரா, தமிழ்நாடு மாநிலங்களில் தொடரும் கடும் மழை, வெள்ளம் காரணமாக நேற்று வரை 38 பேர் இறந்துள்ளனர்; போக்கு வரத்து ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன

ஆந்திரா மாநிலத்தில் கரையோரப் பகுதிலும், ராயல்சீமா பகுதியிலும் கடந்த மூன்று நாள்களில் தொடரும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் நெல்லூரில் 12 பேரும், கடப்பாவில் 11 பேரும், பிரசாஸில் ஒருவருமாக மொத்தம் 24 பேர் இறத்துள்ளனர்.

ஆயிரக்கணக்கானவர்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளதால் மீட்புப்பணி முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சென்னை நகரில் 7 பேரும், மற்றும் இடங்களில் 7 பேரும் இறந்தனர். தமிழகத்தில் போக்கு வரத்து மற்றும் ரயில் பாதைகள் சேதமாகியுள்ளன. உடைமைகள் நாசமாகின. (உ-3)

# ஈழத் தமிழருக்கு கலைஞர் குரல் எழுப்ப வேண்டும்

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சர் மு கருணாநிதி தமிழர்களின் தூதுவராகச் சென்று இந்திய மத்திய அரசுடன் பேச்சு நடத்தி இவ் விடயத்தில் மத்திய அரசைத் தலையிட்டு தீர்வு காணும்படி வற்புறுத்த வேண்டும்.

இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. அன்பரசு நேற்று முன்தினம் சென்னையில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

ஈழத் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ. என். டி.எல்.எவ்) இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பா. பாண்டியன் —

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நியாயமாள தீர்வு காண மத்திய, மாநில அரசு தலையிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இந்தியாவுக்கு அகதிகளாக வரும் மக்களை ஏற்றி வருகின்ற படகுகளை இந்தியா தடுக்கக் கூடாதுஎன்றும்அவர் கேட்டுக் கொண்டார். (உ-3)

இலங்கை இனப்பிரச்சினை விவகாரம்:

# தனது தார்மீகப் பொறுப்பிலிருந்து இந்தியா விலகிவிடக் கூடாது!

## 5 தமிழ்க் கட்சிகள் குஜ்ராலிடம் நேரில் வலியுறுத்தும்

கொழும்பு, ஒக். 21

இலங்கை இனப்பிரச்சினை நாட்டின் உள்நாட்டு விவகாரம் என்று தெரிவித்து அப் பிரச்சினையை உதாசீனம் செய்து —அதில் தனக்கு இருக்கும் தார்மீகக் கடப்பாட்டில் இருந்தும், பொறுப்பில் இருந்தும் — இந்தியா விலகி விட முடியாது; விலகிவிடவும் கூடாது.

—இவ்வாறு இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ராலை ஒன்றாக நேரில் சந்தித்து அவரிடம் வலியுறுத்திக் கூற ஐந்து தமிழ்க் கட்சிகள் முடிவு செய்திருக்கின்றன.

நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் வியாழக்கிழமை குஜ்ரால் கொழும்பு வருகின்றார்.

அவரை ஒன்றாக நேரில் சந்தித்து இப்பிரச்சினை குறித்து எடுத்துக் கூற ஈ. பி. டி. பி., புளொட், ரெலோ, ஈரோஸ், ஈ. பி. ஆர். எல் எவ். ஆகியவற்றின் தலைவர்கள் முடிவு செய்திருக்கின்றார்கள்.

வெளிநாடு சென்றுள்ள ஈ. பி. டி. பி. யின் செயலாளர் நாயகம் திரு. டக்ளஸ் தேவானந்தா, புளொட் இயக்கத் தலைவர் த. சித்தார்த்தன் ஆகியோர் இவ்வாரம் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-1)

அரசுக்கு எதிராகச் செயற்படும்

# படை அதிகாரிகளுக்கு பத்து நாளில் மாற்றம்

அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம்— அதாவது இன்னும் பத்து நாள்களில் — வடக்கு, கிழக்கில் பணியாற்றும் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் தரத்தில் பல்வேறு இடமாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன.

அரசுக்கு எதிராக இராணுவத்தில் சிலர் செயற்பட்டு வருவதாகக் கிடைத்துள்ள தகவல்களை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

'' யுக்திய '' பத்திரிகையின் செய்தியாளர் மனோறஞ்சன் இத்தகவலை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்த சில விடயங்கள் வருமாறு:-

பத்திரிகைத் தணிக்கை நீக்கப்பட்டதும் வடபகுதி விவகாரங்கள் குறித்து தகவல்கள் வெளியாகத் தொடங்கியுள்ளன.

வடபகுதியிலிருந்து வருவோர் இருவிதமான குற்றச்சாட்டைக் கூறுகின்றார்கள். வகை தொகையின்றி மக்கள் கைது செய்யப்படுவது ஒன்று. நள்ளிரவு வேளைகளில் வீடுகளில் உள்ள பெண்கள் தொல்லைகளுக்குள்ளாக்கப்படுவது — மற்றையது

சுமார் 1500 இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 750 பேர் பற்றிய விவரங்களை மட்டுமே யாழ். அரசாங்க அதிபர் கொழும்பிலுள்ள மனித உரிமைகள் அமைப்புக்குச் சமர்ப்பித்துள்ளார்.

இவ்வாறான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பற்றி பெரிதாகக் கூற ஒன்றுமில்லை.

யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட பின்னர் மனித உரிமைகள் மீறல் ஆணைக்குழுவின் பணிமனை ஒன்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட வேண்டும் எனப் பலர் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் இன்று வரை அரசினால் உத்தியோக பூர்வமான அனுமதி இதற்கு வழங்கப்படவில்லை.

இது தவிர, தென்னிலங்கையில் இயங்கும் சுயாதீனக் குழுக்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கு அங்கு சென்று வர வசதியளித்தால் மாத்திரமே இவ்வாறான சம்பவங்களை முற்றாகத் தடுக்கலாம். — என்றார். (உ-10)

## கேதார கௌரி விரதம்

யாழ்ப்பாணம், ஒக். 21

தென்மட்டுவில் வேரற்கேணி ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவில் கேதார கௌரி விரத விழா இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெறும்.

தினமும் பிற்பகல் 2 30 மணி முதல் கௌரி அம்பிகைக்கும், கேதார கௌரி நாதராகிய சிவனுக்கும் விஷேட பூசைகள் நடைபெறும். (அ-4)

நவிண்டிலில்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாகவும் —

இதனால் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு படையினர் உயிரிழந்ததாகவும் அப்பகுதியில் பேசப்பட்டது. ஆனால் அச்செய்தியை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (உ)

# குடாநாட்டில் அரைவாசிப்பேருக்கு இன்னும் ஓய்வூதியம் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த சிவில் ஓய்வூதியர்கள் தவிர்ந்த ஏனைய பகுதி சிவில் ஓய்வூதியர்களுக்கு இன்னமும் இம்மாத ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி 4 பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 6 ஆயிரம் ஓய்வூதியர்களுக்கும், அந்தந்தப் பிரதேச செயலகங்கள் ஓய்வூதியம் வழங்க நிர்ணயிக்கப்பட்ட திகதியில் — அதாவது கடந்த 10 ஆம் திகதி — ஓய்வூதியத்தை வழங்கி விட்டன.

ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள சுமார் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓய்வூதியர்களுக்கு இன்னமும் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை.

ஓய்வூதியம் விநியோகிப்பதற்கான பணிகள் யாழ். செயலகத்திலிருந்து மேற்படி நான்கு பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் பரவலாக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

ஏனைய பத்து பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் உரிய - ஓய்வூதிய வழங்கல் — பணிகளை தொடர்ந்து யாழ். செயலகமே மேற்கொண்டு வருகின்றது.

இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த ஓய்வூதியர்களுக்குரிய இம்மாத ஓய்வூதியத்தை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளை யாழ்.செயலகம் தற்போது செய்து வருவதாகவும் —

உரிய வவுச்சர்கள் கொழும்பில் இருந்து இன்னமும் வந்து சேரவில்லை என்றும்— தெரிவிக்கப்பட்டது.

ஒய்வூதிய வவுச்சர்கள் கொழும்பில் தயாராகவுள்ளதாகவும்- அடுத்துவரும் கப்பல்களில் அவை எடுத்து வரப்படும் என்றும்- செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3)

இலங்கையை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரப்புகள் இணைந்த கூட்டு விமானப் படையினர் விடுதலைப் புலிகளின் கப்பல்களைக் குறிவைத்து 24மணி நேரமும் கடல் பகுதியில் தீவிரக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கப்பல்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் ஒன்று கடைசியாக மத்திய தரைக்கடற் பகுதியில் காணப்பட்டது.

அண்மையில் சர்வதேச பொலீஸ் மூலம் கிடைத்த தகவல் ஒன்றின் படி முல்லைத்தீவுக் கடற்பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று இலங்கை விமானப் படையினாலும், கடற்படையினாலும் அழிக்கப்பட்டது— என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

இனப்பிரச்சினை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்ற நிர்ப்பந்தம் உருவாகி வருவதாகவும் கொழும்பில் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய பின்னணியில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வது குறித்து தீர்க்கமாக முடிவு செய்யும் நிலையில் அரசு இல்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதற்கிடையில்—

இலங்கை இன விவகாரத்தில் ஐ. நா. பங்கேற்பதை இந்தியா கடுமையாக ஆட்சேபித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

யாழ்ப்பாணத்திற்கு ஐ.நா. படைகள் வரக்கூடிய முன்னுதாரணம்—

காஷ்மீர் விடயத்திலும் அதே பாணியைப் பின்பற்றுமாறு வலியுறுத்துவதற்கு பாகிஸ்தானுக்கு ஒரு சாதகமான அம்சமாக மாறிவிடும் என இந்தியா அஞ்சுகிறது.

அதனாலும்—

இலங்கை விவகாரம் தனது கைகளுக்கு அப்பால் போய், அமெரிக்காவின் ஆதிக்கம் இப் பிராந்தியத்தில் அதிகரிப்பதற்கு வழி செய்யும் என்பதாலும்—

இந்தியா இலங்கை விடயத்தில் ஐ.நா.வின் பங்கினை ஆட்சேபிப்பதாகச் சொல்லப்படுகின்றது. (அ-உ)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தமிழ் - ஆங்கில தட்டச்சு
மற்றும்
றோணியோ வேலைகளுக்கு
அருண்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org